
www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர் – 24

Chanchive 24-Udgave




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1993

# சஞ்சீவி

ஆடி - ஆவணி

மலர் - 24

பக்கம் உள்ளடக்கம்

3. நோக்கு
9. கருத்துக்களம்
19. சிறுகதை: யாவும் கற்பனையல்ல.
21. கடிதங்கள்
24. டென்மார்க்கில் தமிழ் மொழிக்கல்வி-யும்/பிரச்சனைகளும்
30. கவிதை: போதும், போதும்
32. கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதா..?
37. சிறுகதை: நேற்றும், இன்றும் இருப்பர்...
44. கவிதை: உறக்கம் இல்லாத இரவுகள்.
46. குறுக்கெழுத்துப் போட்டி.
49. சிறுகதை: [illegible]
53. [illegible]
56. [illegible]

>>அட்டைப்பட விளக்கம்>>

பிணந்தின்பார் பசியாற
மனங்கள் இறுதி.....
எதிர்க்கப்போவனவை
பதாகைகள் மட்டுமே!

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு:

CHANCHIVE
Danmarksgade.10.
7500 Holstebro
DANMARK

www.tamilarangam.net

# நோக்கு

1949ல் ஆண்டில் இந்து மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதில் இருந்து 1958 இனக்கலவரம், 1977 இனக்கலவரம், 1983 இனக்கலவரங்கள் என தொடர்ச்சியாக தமிழ்மக்களுக்கெதிரான இன அழிப்புக்களை சிங்களப் பௌத்த பேரினவாத அரசு திட்டமிட்டு நடாத்திவந்துள்ளது.

இப்படியாகப் பல தொடர்ச்சியான கலவரங்கள் ஏற்பட்டிருந்தாலும் இந்த 1983 யூலைக் கலவரம் என்றுமேயில்லாமல் மனிதகுலமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு சிறையிலிருந்த 53 கைதிகளின் கண்கள் பிடுங்கப்பட்டும், வெட்டிக் குதறிக் கொலைசெய்யப்பட்டும் அதேபோலவே என்றுமில்லாத பெரிய அளவிலான உயிர்ச் சேதங்களையும், தமிழர்களின் விலைமதிக்கமுடியாத எத்தனையோ கோடிச் சொத்துக்களையும் சிங்களக் காடையர்கள் கொள்ளையடித்து, நாசமாக்கியது எல்லோரும் அறிந்த ஒன்றே.

இந்த 83 யூலை இனப்படுகொலைகள் நடந்துமுடிந்து 10 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது.

புலிகளால் நடாத்தப்பட்ட திருநெல்வேலித் தாக்குதலில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் உடல்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு தகனம் செய்யப்பட்டவுடன் இந்தக் கலவரம் வெடித்தெழுந்தது.

முதன் முதலில் இலங்கைப் பாதுகாப்புப் படைக்கு ஏற்பட்ட ஒரு பாரிய இழப்பிற்காக முழுத்தமிழினத்தின் மேலும் ஒரு இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிடுவதாக J.R. ஜெயவர்த்தனா தலைமையிலான இலங்கை அரசு திட்டமிட்டு இந்த நடவடிக்கைகளைச் செய்திருந்தது. இந்தத் தமிழின அழிப்புக்கலவரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காடையர்களுக்கு அரச காரியாலயங்களினால் கையளிக்கப்பட்ட தேர்தல் பதிவேடுகள் தமிழர்களின் வதிவிடங்களை இலகுவாகக் காண்பித்துத் தாக்குவதற்கு உதவியாக இருந்ததோடு, நாளுக்கான சிங்கள வானொலி அறிவிப்புக்களாலும் மிகவும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

தென்பகுதியில் வேலைவாய்ப்பிற்கு மட்டுமல்லாது, அங்கேயே பிறந்து வளர்ந்த எத்தனையோ பேர்களும் இக்கலவரத்தால் தாக்கப்பட்டும், தப்பிப் பெருவாரியாக வடபகுதிக்கு அகதிகளாக வந்துசேர்ந்ததும் இதுவே எமது தாயகம், இதுவே எமது சொந்த மண் எனக் காட்டுவனவாக்கி, முத்திட்டு

www.tamilarangam.net

வடபகுதியில் பலதரப்பட்ட இடர்ப்பாடுகளின் மத்தியிலும் நம்பிக்கைகளோடு தமது வாழ்விற்கு அர்த்தம் தேட முயன்றனர்.

1983 வரைக்கும் மென்மையாகவிருந்த தமிழ்த்தேசியம் இந்த இன அழிப்புக் கலவரத்தோடு தீவிர எழுச்சி பெற, தமிழ்ப்பிரதேசங்களில் 30 க்கு மேற்பட்ட போராட்ட இயக்கங்கள் உருவாக ஏதுவாகியது. பலபாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் உறுதிமிக்க நம்பிக்கையுடன் இந்த இயக்கங்களில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இனங்களுக்கிடையிலான முரண்பாட்டின் காரணமாக ஏற்பட்ட தேசிய எழுச்சியை, மார்க்சியர்கள் இனங்காணத் தவறிவிட்ட வேளையில் இந்திய அரசானது தனது விஸ்தரிப்புவாதக் கோட்பாட்டுக்காக ஒருகணமேனும், தாமதியாது இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது கருத்துக்களுக்குச் சார்புடைய ஐந்து இயக்கங்களை முதன்மைப்படுத்தி வளர்த்துவிட்டது.

தமிழ்த்தேசிய விடுதலை நோக்கினை முன்னெடுத்த இந்த இயக்கங்களுள் சரியான அரசியல் வழிநடத்தல் இன்மை காரணமாகவும், தலைமைப் பொறுப்புக்களில் இருந்தவர்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டியே, அன்று புதிய வெளிக்கிளம்பல்களாலும் இந்திய அரசால் ஒவ்வொரு இயக்கங்களுக்கும் போராட்டம் தொடர்பாக கொடுக்கப்பட்ட கருத்தியல்புகள் காரணமாகவும், இயக்கங்களுக்குள் ஏற்பட்ட உட்பூசல்களாலும், உள்வினைகளாலும் இயக்கங்களுக்கிடையில் பகைமுரண்பாடுகளை ஏற்படுத்தி, சிறுமோதல்களும் சில கொலைகளும் ஆங்காங்கே இடம்பெற்றன.

இந்நிலையில் பார்வையாளர்களாக வைக்கப்பட்டிருந்த மக்கள் மத்தியில் உசமாக:-

> "ஐயோ, இந்தப்பொடியள் எல்லாம்
> ஒன்றாய்ச் சேர்ந்தால் எங்களுக்கு கெதியாய்
> நாடு கிடைச்சிடும்" என ஒவ்வொரு தமிழ்
> மக்களும் வெளிப்படையாகப் பேசிக்கொண்டது
> இன்றும் எங்கள் ஒவ்வொருவர் காதிலும்
> ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இப்படியான மனநிலையில் இருந்த தமிழ்மக்கள் மத்தியில் புலிகள் 'ரெலோ' இயக்கத்தினர் மீது நடாத்திய அழிப்புநடவடிக்கையும் 83 யூலைக் கலவரத்தின் நடவடிக்கையினால் 30க்கு மேற்பட்ட அமைப்புக்கள் தோன்றி தமிழ்தேசியப் போராட்டத்தை தீவிரப்படுத்தி தமிழ் மக்களின் ஆதரவை பலத்தைப் பெற்றுக்கொண்ட தன்மையினை இழக்கச் செய்ததோடு, தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தேக்கத்துக்குள்ளாக்கிய முதல் நடவடிக்கையாகும்.

எல்லா இயக்கங்களுக்குமிடையே இருந்து வந்த "மாற்று இயக்க அழிப்புக்கொள்கை" அதிதீவிரமடைந்து இயக்க ஆதரவாளர்கள் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களையும் அழித்துக்கொண்டிருந்தனர். மாற்று இயக்கத்தினரைத் தேடி ஆயுதங்களுடன் அலைந்து திரிந்து, மாற்று

இயக்கக்காரர்களையும், பொதுமக்களையும், சித்திரவதை செய்தும், இத்திக் தெருவில் சுட்டும், தலைவெட்டியும், எரித்தும் சிங்கள இனவாத அரசாங்கம் முன்மாதிரி காட்டி செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் "இந்திய அமைதி காக்கும் படை" வந்து இறங்கியது.

இனவாத இலங்கை அரசின் இன அழிப்புத் தாக்கமும், இயக்கங்களின் மீதான அவநம்பிக்கையும், இந்திய அரசு பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளாத நிலையிலும், இந்திய அமைதிப் படையின் வருகையானது தமிழ் மக்கள் மத்தியில் அளவில்லாத குதூகலத்தை ஏற்படுத்தியது.

நாளடைவில் இந்திய இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையிலான ஒப்பந்த மீறல்களால் இருபகுதியினருக்கும் முரண்பாடுகள் வளர்ந்து கொண்டு போய் நாளடைவில் அதுவே போராக மாறியது.

இந்த யுத்தத்தில் இந்திய இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று கொள்ளையடித்ததுடன், 'புலிவேட்டை' என்ற பெயரில் அப்பாவி இளைஞர்களைக் கொன்று குவித்ததோடு, புலி ஆதரவாளர்கள் என்று அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றும், பெண்களைக் கற்பழித்தும், சிறையிலிட்டும், சித்திரவதைகள் செய்தும் தங்கள் வெறித்தனத்தை வெளிப்படுத்தினார்கள். இந்தியப்படையின் உதவியோடு EPRLF, TELO போன்ற தமிழ்த் துரோகக் கும்பல்களும் புலிவேட்டை என்ற பெயரில் இளைஞர்களையும், யுவதிகளையும் துன்புறுத்திக் கற்பழித்து கொலைசெய்ததோடு கட்டாய இராணுவச் சேர்ப்பு என்ற பெயரில் ஒன்றுமே தெரியாத பல பச்சிளம் பாலகர்களையும் தம்முடைய இயக்கத்தில் வலிந்து சேர்த்துக்கொண்டு, தங்கள் மிருகத்தனவெறிக்கு பலபேரைப் பலியாக்கிக்கொண்டனர். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் அவதியுற்று திரிபட்ட சில இடத்து மக்கள் இலங்கை இராணுவ முகாமுக்குள் புகுந்து கொண்ட நிகழ்வுகளும் நடந்தேறியது.

இந்த நிலையில் பிரேமதாசா அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான இரகசிய கூட்டுறவோடும், தமிழ் மக்களின் ஆதரவுடனும், ஆக்கிரமிப்பு நோக்குடன் வந்த இந்தியப்படையினர் இலங்கையை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டனர். இவர்களுடன் இணைந்து நின்று மாநில சபை ஆட்சியை அமைத்துக்கொண்ட EPRLF இனரும் தற்பாதுகாப்புக் கருதி இந்திய இராணுவத்தினருடன் நகர்ந்து சென்றனர்.

இத்தருணத்தில் புலிகளுக்கு சிவப்புச் சாயம் பூசியோர் இந்திய அரசுக்கு எதிராக புலிகள் இலங்கை அரசுடன் ஐக்கிய முன்னணி அமைத்ததாகவும், சீனப்புரட்சியின் போது மாஓ சேதுங் - சியாங்கேசேக்குடன் ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கெதிராக ஐக்கிய முன்னணி ஏற்படுத்தினார்கள் என்றும் உதாரணங்களும் இவர்களால் சொல்லப்பட்டது பலருக்கும் நினைவிருக்கும். ஆனால் இன்றுவரை புலிகளோ இலங்கை அரசோ அக்காலகட்டங்களின் இசைபட்ட விடயங்களை வெளியிடாமல் இருப்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், பெரும்பான்மையினரின் ஆதரவோடு புலியியக்கத்தினர் வடபகுதியில் திறமான ஒரு 'சிவில்' நிர்வாகத்தை அமைத்துக்கொண

டனர். இவர்கள் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியிருந்தும் மக்களின் நலன்களில் இருந்து சிந்திக்காமல் தமது இயக்க நலன்களில் இருந்து சிந்திப்பதன் காரணமாக இவர்கள் மக்களின் மீது வரிச்சுமைகளையும் எந்தவிதமான சுதந்திரங்களுக்கோ (பேச்சு, கருத்து, எழுத்து) இடமில்லாத நிலைமைகளிலும், வெளியிலும் பல சிறைக் கூடங்களை அமைத்து சித்திரவதை செய்து வருகின்றனர்.

ஆகவே, இவர்கள் தங்கள் நலன்மீது இறுக்கமானவர்களாய் இருப்பதால் மக்களின் நலன்மீது அக்கறையுள்ள மாற்று அமைப்புக்கள் தோன்றும் என்பது தவிர்க்க முடியாது. இதன் காரணமாக ஏறக்குறைய 5,000 க்கு மேற்பட்ட மக்கள் கைதிகளாக சிறைகளிலும், வெளிச்சிறைகளிலும் கொடுமைப்படுத்தப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் வருகின்றனர். இந்த நடவடிக்கையானது 83 ஜூலைக் கலவரத்தில் 53 சிறைக் கைதிகளை கொடூரமான முறையில் சித்திரவதை செய்து கொன்றதன் மூலம் ஏற்பட்ட தேசியவிடுதலைக்கான உணர்வுகளும், இன்று புலிகளின் வதை முகாமில் கொல்லப்பட்டவர்கள் போக 5000 ற்கும் அதிகமான கைதிகளின் வாழ்வும், தேசியவிடுதலைப் போராட்டத்தை தேக்கத்துக்குள்ளாக்கின்றது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் மக்கள் நலன்கொண்ட, தேசியப்பற்றுக் கொண்ட மண்ணை நேசிக்கும் சிறு அமைப்புக்கள் அங்கிருந்தும், புலிகளை தேசிய சக்திகளாக ஏற்றுக்கொண்டவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். இவர்களைத் தேடி அழிப்பதிலும் புலிகள் பின்னிற்கவில்லை.

இந்த நடவடிக்கைகளுக்கு மேலாக ஒருபடி மேலே போய், பாரம்பரியமாக வடபகுதியில் வாழ்ந்துவந்த சிறுபான்மையினராகிய முஸ்லிம் மக்களை சில மணிநேர காலக்கெடு கொடுக்கப்பட்டும், உடமைகள் பறிக்கப்பட்டும் அவர்கள் வாழ்ந்த, தமிழ்ப்பகுதியிலிருந்து வேரோடு அப்புறப்படுத்தினர்.

சிங்களப் பௌத்த பேரினவாதத்துக்கு எதிரான தமிழ்தேசிய விடுதலைப் போராட்டம், தன்னகத்தே சிறுபான்மை இனத்தவர்களையும் கொண்டிருந்து போராட்டத்தை நடாத்தியபோது சர்வதேச அரங்கில் தமிழ்த்தேசியப் போராட்டமானது தார்மீகப் பலத்தைப் பெற்றிருந்தது. ஆனால் புலிகளின் தொடர்ச்சியான நடவடிக்கைகளால் தமிழ்த்தேசிய இனத்தின் நியாயமான கோரிக்கை செல்லாக்கிடிக்கத் தொடங்கியது. இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டு நடவடிக்கைகள் காரணமாகவும் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பிரச்சாரங்களின் காரணமாகவும் இன்று தமிழ் தேசிய இனத்தின் நியாயமான கோரிக்கைகள் நிலையாக எடுத்துரைக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் புலிகள் முஸ்லிம் மக்களை வெளியேற்றிய இவ்விடயம் தமிழ்த்தேசிய விடுதலை என்ற பதத்தில் இருந்து நகர்ந்து தேசியவெறியாக மாறியுள்ளது என இன்று எல்லோராலும் சொல்லப்படுகின்றது.

இப்படியாக தோன்றியாக்கப்பட்ட சூழ்நிலைக்குப் பிறகும், புலிகளை நியாயப்படுத்துவோர் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் புலிகளை நியாயப்படுத்தும் விளக்கங்கள் பற்றி இங்கு கூறுவதற்கு இந்தச் சிறியமலர் போதாது.....

www.tamilarangam.net

இப்படியான ஒரு சூழ்நிலையில் வடபகுதியில் இருந்து கொழும்பில் போய் வாழலாம் எனக் கருதிக்கொண்டு பல தமிழ் மக்கள் போய் குடியேறுகின்றனர். ஆனால் கொழும்பு வாழ் தமிழ்மக்கள் நிலையும் கவலைக்கிடமானதே. பிரேமதாசா படுகொலைக்குப் பின்னர் ஏதாவது பயங்கரமான இனக்கலவரம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தது போல இன்றுவரை ஒன்றும் நடைபெற்றுவிடவில்லை. பிரேமதாசாவையும், லலித் அத்துலத் முதலியையும் புலியினர் தான் கொன்றனர் என்று 'பொலிசார்' அறிவித்திருந்தாலும், அப்படியான ஒரு நம்பிக்கை இருந்தாலும், புலி வேட்டை என்ற பெயரில் பெரும்பாலான தமிழ்மக்கள் கைதுசெய்யப்பட்டு பலவகையான உடல், உளச்சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

கொழும்பில் அரசியல் கடைகள் திறந்து வைத்திருக்கும் EPDP, PLOT TELO, புதியஜனநாயகக்கட்சி, EROS போன்ற அமைப்புகளில் EPDP, PLOT, TELO போன்ற துரோகக் கும்பல்கள் அரசாங்கத்தோடு சேர்ந்து இந்த உடல், உளச்சித்திரவதைகளைச் செய்து வருகின்றனர். இவர்களைவிட படித்தவர்கள், பட்டதாரிகள், நாலும் தெரிந்தவர்கள், நல்லது செய்யக் கூடியவர்கள் எனச் சொல்லப்பட்ட EROS அமைப்பின் ஒரு பகுதியினர் புலிகளுடன் சேர்ந்துள்ளனரும், ஏனையோர் இலங்கை அரசுக்கு ஒத்தாசையாக பாராளுமன்றத்தில் பதவிவகிப்பவர்களாகவும் உள்ளனர்.

சட்டம் படித்த கூட்டணியினரின் சட்டாம்பித்தனமான துரோகத் தனங்களைவிட, பட்டம் படித்த EROS இன் துரோகத்தனங்கள் சளைத் தவைகள் அல்ல.

கொழும்பில் வேலைசெய்ய வந்திருப்பவர்களும், வெளிநாட்டுக்குப் போக வந்திருப்பவர்களும், வெளிநாடுகளிலிருந்து தங்கள் உறவினர்களைச் சந்திப்பதற்காக வந்திருப்பவர்களும், வடக்கு- கிழக்கிலிருந்து வந்து குடியேறிய தமிழர்களும் இப்படியான சித்திரவதைகளுக்கு ஆளாகின்றனர்.

இந்தியாவில் தஞ்சம் கோரியிருக்கும் தமிழர்கள் நாளுக்குநாள் நாட்டுக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருப்பதுடன், அங்கேயிருக்கும் அகதிகள் சொல்லமுடியாத, எழுதமுடியாத பல இன்னல்களையும் வேதனைகளையும் அனுபவிப்பதோடு, பல நெருக்கடிகளுக்கும், கெடுபிடிகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். 83ல் தமிழகத்தில் இருந்த ஈழ ஆதரவு அலையானது ராஜீவ் படுகொலைக்குப் பின்னர் ஈழ எதிர்ப்பு அலையாக மாறியிருப்பது இன்று யாவரும் அறிந்த கசப்பான உண்மையே.

இன்று புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் வெளிநாட்டவர்க்கு எதிரான தீவைப்புகள், கொலைகள், கொள்ளையடிப்புகள் போன்ற தீயநடவடிக்கைகளும், புதிய நாஜிகளின் அதிதீவிர வளர்ச்சியும், வளர்ந்து வரும் நிறவெறியும் அகதிகள் வாழ்வில் நிம்மதியைக் குலைக்கின்றது. அண்மையில் Denmark ல் உள்ள Struer என்ற நகரத்தில் புதிதாக உருவாகிய புதிய நாஜிகள் அமைப்பின் தலைவர் TV (Midt-vest) க்கு அளித்த பேட்டியில் முதலில் தமிழர்களை வெளியேற்றுவதே எங்களது பிரதான

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

www.tamilarangam.net

# வணக்கம்.

ஒரு உயிரைக் காப்பதற்கான வேண்டுகோள் இது. எஸ்.வி.ராஜதுரை - நீங்கள் அறிந்த பெயர்தான். அவர் தற்போது இதயநோயால் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கிறார். ஆகஸ்டு-4ந்தேதி "பை-பாஸ் சர்ஜரி" செய்தாக வேண்டும் என மருத்துவர்கள் தெரிகவித்துள்ளனர். சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவாகும் எனத் தெரிகிறது.

தனது வாழ்வின் பெரும்பகுதியை சமூக நலனுக்கான பணிகளில் செலவிட்டுவருபவர். தனக்கென சொத்து எதையும் சேர்த்துக்கொள்ளாதவர், எஸ்.வி.ராஜதுரை. தமிழகத்தின் மார்க்சிய அறிஞர்களில் முதன்மையானவராக வைத்துகருதப்படுபவர். எக்ஸிஸ்டென்ஷியலிசம், அந்நியமாதல் போன்ற தத்துவங்களையும், அல்துஸர், க்ராம்ஸி, ப்ராங்பர்ட் மார்க்சியர்கள் போன்றோரின் சிந்தனைகளையும் தமிழில் அறிமுகப்படுத்தியவர் அவர். இலக்கிய தளத்திலும் அவரது பதிவுகள் எவரும் புறக்கணிக்க முடியாதவை.

மக்கள் குடியுரிமை சங்கத்தின் (பி.யு.சி.எல்) தமிழ் நாட்டுக்கான பொதுச் செயலராக இருந்து அவர் ஆற்றிவரும் பணிகள் எண்ணற்றவை. வாச்சாத்தியில் ஆதிவாசிப்பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், அண்ணாமலைநகர் காவல் நிலைய சம்பவம், தமிழ் நாட்டில் போடப்பட்ட கருப்பு சட்டங்களின் அத்து மீறல்கள் இவையெல்லாம் இந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் மக்கள் கவனம் பெற காரணமாக இருந்தவர் அவர். தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும் தனது உடல் உபாதைகளையும் மீறி பயணம் செய்து மக்கள் உரிமைகளைக் காக்க உழைத்து வருபவர்.

இப்படியான நமது தோழர் எஸ்.வி.ராஜதுரை தனது உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். அவரது உயிரைக்காக்கும் பணியில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வோம். உங்களால் முடிந்த தொகையை உடனடியாக அவருக்கு அனுப்பி உதவுங்கள் என வேண்டுகிறோம்.

அவரது முகவரி :-

எஸ்.வி.ராஜதுரை
பி-1 முதல் மாடி
பில்லர் அபார்ட்மென்ட்ஸ்
13-பி, 10 ஆம் நிழற்சாலை
அசோக் நகர், சென்னை-83

அன்புடன்

ஆசிரியர் குழு

நிறப்பிரிகை.

மேலதிக தொடர்புகட்கு

நிறப்பிரிகை

அஞ்சல் பெட்டி : 192
பாண்டிச்சேரி - 605 001



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாம் எங்கே போகிறோம்?

- வேதா இலங்காதிலகம்

சஞ்சீவி இதழ் 23ல் அமந் எழுதிய "இன்னமும் ஏன்" என்ற கட்டுரையை வாசித்தேன். பெண்களுக்கு ஆண்வர்க்கத்தினரால் ஏற்படும் துன்பங்களை விளக்கியுள்ளார். அதில் பக்கம் 41ல், 19ம் வரியிலிருந்து 30வது வரிவரை அவர் தந்த கருத்தை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை.

(அவரின் 19ம் வரியின் ஆரம்பம்:- "சரி, எமது மண்ணில் தான்....
30வது வரி:- புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பெண்களால் எதிர்க்க முடியவில்லை.... ?)

அவர் தந்த கருத்தின் எனது விளக்கமானது:-

பணம் இங்கு தாராளமாகக் கிடைக்கிறது. அடிமை வாழ்வை எதிர்க்க வேண்டும், வெற்றி பெறாவிட்டால் அது போலி வாழ்வென அப்பெண் ஒதுங்கி தனித்து வாழவேண்டும். இதை இன்னும் மிக சுருக்கமாகக் கூறினால் ஐரோப்பிய வாடை வீசுகிறது என்று தான் கூறவேண்டும்.

அண்மையில் லண்டன் பீ.பீ.சி (B.B.C) தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஆசியப் பெண்களைப் பற்றிய பல ஒளிபரப்புகளைப் பார்க்க முடிந்தது. அதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இன்று விலைமாதர்களாக லண்டன் வீதியில் எனக் காட்டப்பட்டது. காரணங்கள் பல; பணம், குடும்பத்தில் வன்முறை, தாம்பத்தியத்தில் ஏற்றத்தாழ்வு, கருத்துவேற்றுமைகள் என்பனவாகும். இது என்னை மிகத் திகைப்படையவும், மிகச் சிந்திக்கவும் வைத்தது. கானல் நீரைக் கண்டு ஏமாந்த கலைமான் போல எமது தமிழ்ச் சமுதாயம் ஏமாறக் கூடாது என்பதே எனது கருத்து.

டென்மார்க்கில் 50ம், 60ம் ஆண்டுகளில் மேற்குவாழ்க்கை முறைபோலக் கூட்டுக்குடும்பம், கணவன்- தலைவன்- உழைப்பவன், மனைவி- குடும்பத்தைப் பேணிப் பாதுகாப்பவள் என வாழ்ந்தனர். அதன் பின்பு காலம் மாறியது. பெண்கள் சுதந்திரம் எனக் குரல் கொடுத்தனர். "சிவப்புக் காலுறை" (Rødstrømpe) போராட்டம் வந்தது. பெண்கள் வேலைக்குப் புறப்பட்டனர். டென்மார்க் பெண்களின்

www.tamilarangam.net

உலகிலேயே முதன் முதலாக சுதந்திரத்தை முற்றுமுழுதாக கையிலெடுத்துக் கொண்டவர்களானர்.

ஆணுடன் சேர்ந்து வாழாமலேயே பிள்ளையை பெற்று "தனி அம்மாவாக" (Enligemor) பிள்ளையை வளர்த்தனர். ஒருசிலர் ஒருபிள்ளையை மட்டுமல்ல இரண்டு பிள்ளைகளை இருவேறு தந்தைகளுக்குப் பெற்றாலும், தனி அம்மாவாக வே பிள்ளைகளை வளர்த்தனர். ஒரு தனி அம்மாவாக இருந்து பிள்ளைகளின் சகல நலன்களையும் கவனி[illegible], வேலை போன்ற கடமைகளைப் பொறுப் பாகச் செயலிக்க முடியவில்லை. விவகார[illegible] தாய்பிள்ளைகளாக [illegible] பலமான போராட்டங்கள், பிரச்சனைகள், தந்தையின் அன்பு இன்றி பிள்ளையின் மனநலன் [illegible].

உதாரணம் :-

[illegible] மனோதத்துவப் பிரிவில் சிகிச்சைக்கு வரும் இருநூறு குழந்தை களில் [illegible], இக்குழந்தைகள் தந்தையின் அன்பு இன்றியும் எந்நேரமும் பெண்களின் நடுவே பெண்களாகச் சூழப்பட்ட பிள்ளைக ளாகவும் உள்ளனர் என்று அப்பிரிவின் பிரதம வைத்தியர் GIDON ZLOTNIK, Barn/unge பத்திரிகையில் Nr 14/3-4-92 இல் கூறுகிறார். இதே கருத்தை யே ஒருபுதிய சங்கத்தின் தலைவரும் "[illegible]" வுமான FLEMING - BOGØ வும் இதே பத்திரிகையில் Nr 40/10-10-92 இல் ஆமோதித்துள்ளார்.

இன்று 92, 93ம் ஆண்டில் பலர் இப்பிரச்சனைகளை உணர்ந்து கொண்டுள் ளனர். பலர் பழைய நிலைமை 50 இல், 60 இல் திரும்பிப் பார்க்கத்தொடங்கியுள்ளனர். நான் "தனி அம்மாவாக" இருக்க விரும்பவில்லை, எனது பிள்ளைக்கு இரத்த சம்பந்த மான சொந்தத் தந்தை தேவை என பல இளம்பெண்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட் டனர். இவர்கள் இப்படி மாறும்போது நாம் நமது அருமையான கலாச்சாரத்தை நன்கு உணர்ந்து, மதித்து புலம்பெயர்ந்துவந்தோம் புதுமை தேவை என தவறான வழியில் போகாது நல்ல பாதையை அமைக்க வேண்டும்.

ஏன் சில ஆண்கள் இன்னும் மாறவில்லை - - - - ?

பல காரணங்கள் உண்டு:-

— எமது சமூகத்தில் பரம்பரையாக வந்த 'பெண்டாளும்' முறை,
— [illegible] தெய்வம் என அவளுக்கு பணிவிடை செய்து திருப்தி காணும் பெண்ணின் அடிதாரணையான அடங்கிப் போகும் தன்மை (இவை இரண் டும் ஒரு ஆணுக்கு பழகிப்போன தன்மை)
— வாலிபனாக இங்கு தனியாக இருக்கும்போது சில [illegible] நேரங்களில் உல்லாசமாக பிறந்தநாட்களை, பெண்களை தங்களுக்குள் [illegible] இல்லையாக விமர்சித்தும் சிரித்தனர்.

எதை இவர்கள் விமர்சித்தனரோ—, அதை இன்று தமது இளம் மனைவி செய்வதற்கு தடைவிதிக்கின்றனர்.

(ஆனால் புத்திசாலியான மனைவியோ காலப்போக்கில் அவனையும் தன்பால் மாற்றிவிடுகிறாள்.

— இடம்கொடுத்தால் இந்த சுதந்திர சமூகத்தில் இவள் மீறிவிடுவாள், அதை விட அடக்கியே ஆளுவோம் என்றநிலை, அவளை இழந்துவிடு வேனோ என்ற பயம். சுயநலம், அறியாமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

— சில கணவன் அறிவில், திறமையில் குறைந்தவனாக இருந்தால் மனைவியை உயரவிடமாட்டான். அவள் தன்னையும் மிஞ்சிவிடுவாள் என்ற நினைவு - மனிதனுள் இருக்கும் இயல்பான பொறாமை உணர்வு.
(இது அறிவு, திறமையுடன் அழகுக்கும் பொருந்தும்)

முதலிரண்டு கருத்துக்களை நாம் எடுத்தால், பெண் " பின்தூங்கி முன் எழு-வாள் " பேதையாகவும் முழுவீட்டு வேலைகளையும் சுமப்பவளாக இருப்பாள். ஆண் பத்திரிகை, T.V. பார்ப்பவராகவும் இருந்த இடத்தில் காப்பி குடித்து, விரித்த கட்டிலில் தூங்கி எழுபவராகவும், சிறிது குரல்விட்டபடி " அவ சும்மா தான் வீட்டில் இருக்கிறா " என கூறுபவராகவும் இருப்பார். இவர் இந்தக் காலத்துக்கு பழைய கௌரவத்தை விட விருப்பமில்லை. அந்த வட்டத்திலேயே அவர் பழக்கப்பட்டவர். அவரால் அதைவிட்டு விலகிவரவோ, அந்தப் பழக்கத்தை மாற்றியமைக்கவோ முடியாது. இவரை ஒரு மனோ-வியாதிக்கு உட்பட்டவர் எனவும் கூறலாம். இவர் மனைவியும் கூட பலவீனமானவளாக இருப்பாள். இவர்கள் மாறிநடப்பவர்களை விமர்சித்தபடியே காலத்தைக் கழிப்பர். இவர்கள் தாங்களாக தங்கள் வட்டத்தை விட்டு விலகிவரவேண்டுமேயன்றி மற்றவர்களால் இவர்களை மாற்றமுடியாது. இது ஒரு ரகம்.

பெண்களின் அடங்கிப்போகும் தன்மை:-

பணிசெய்வதில் திருப்தி காணும் பெண் தனது பணிகளைத் திறம்படச் செய்கிறாள். ஆனால் இவளது தனித்தன்மை இங்கு அழிகிறது. உதாரணமாக ஒரு வீணை வாசிப்பவள் கணவனின் விருப்பப்படி அதைக் கைவிடுகிறாள். மனதில் அழுதபடியே வாசிப்பை நிறுத்திவிடுகிறாள். வீணைத் திறமையுடன் இவள் மேடையேறுவது அந்தக் கணவனுக்கு எவ்வளவு பெருமை என்பதனை கணவன் இங்கு உணரத் தவறுகிறான். இந்தத் தாயின் திறமையைப் பார்க்கும் பிள்ளை நாளை தானும் ஒரு திறமைசாலியாக வர எண்ணுவான். தாய் இங்கு இந்தப் பிள்ளைக்கு ஒரு மாதிரிப் பாடமாகவும், அந்தப் பிள்ளை உலகில் தான் எதையாவது சாதிக்கவேண்டும் என்னும் எண்ணத்திற்கு தூண்டு கோலாக இருப்பவளாகவும் ( எண்ணத்தைத் தூண்டுபவளாகவும் ) அமைகிறாள். இந்தச் சந்தர்ப்பங்களை எல்லாம் இந்தத் தந்தை இங்கு இழக்கின்றான். தாயின் தன்னம்பிக்கையை இங்கு பொடிப்பொடியாக்குகின்றார்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் தாயானவள் அதை வீட்டிலேயே பயிற்சி செய்யலாம். பிள்ளைகட்கு கற்றுக்கொடுக்கலாம், தன் அயலார் நண்பர் பிள்ளைகட்கும் கற்றுக் கொடுக்கலாம். ( நாம் நம் கலைகளை அழியவிடாது ஒரு வாரிசையே உருவாக்கிவிடலாம் ) காலப்போக்கில் தந்தை மனம்மாறலாம், மெள்ள மெள்ள மாற்ற வேண்டும்.

'ஆண் அடக்கி ஆள்கிறான்' என புலம்பெயர்ந்த பெண்கள் குரல்கொடுக்கின்றார்கள். இதற்குக் காரணம் ஐரோப்பிய கலாச்சாரத்தை எடுத்துப் பெண்தான் கெட்டுப் போய்விடுவாள் என்ற ஆணின் பயமே காரணமாகும். அத்துடன் அங்கு சுயநலமும் உண்டு. (அவள் தனக்கு மட்டுமே வேண்டும் என்ற)

இந்த உணர்வை மாற்ற இருசாராரும் தமது அறிவுவட்டத்தைப் பெருக்கவேண்டும். குறுகியவட்டத்தில் நின்று சிந்திக்கும் போது பல பயங்கள், குழப்பங்கள் எழுவது இயற்கையே. பரந்த அறிவுவரும் போது புரிந்துணர்வு ஏற்படும். ' 'உனக்கு நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்கு நீ' என்ற அடிப்படை உணர்வு மனதில் உருவாகும்.

ஐரோப்பாவில், இங்கு அடிக்கடி கணவன்- மனைவி- பிள்ளைகள் ஒருவருக் கொருவர் "நான் உன்னை நேசிக்கிறேன், I love you, Jeg elsker dig" எனக் கூறுவார்கள். இந்த அடிப்படை உணர்வை ஒருவருக்கொருவர் அடிக் கடி நினைவுபடுத்தவே இப்படிக் கூறுவார்கள். இந்த நெருக்கடியான இயந்திர உல கில் அவசியமும் கூட என நான் நினைக்கிறேன்.

பல ஆயிரம் மைல்கள் பறவைகள் பறந்து இரைதேடினும், மாலையில் இரவில் கூட்டில் வந்து கூடுகின்றன. குடும்பமும் கணவன், மனைவி என்ற நெருக்கத்திலே உருவாகும் கூடுதானே? இங்கு அடக்குமுறை, அடிமைத்தனம் தேவை இல்லை. புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், சிநேகிதம் ஒற்றுமையே தேவை. இந்த கூட்டுறவின் தலைமைப் பதவி ஒருவருக்குக் கொடுக்கலாம்- இருக்கவேண்டும். அது கணவனாகவும் இருக்கலாம்.

திரு மணத்தை இருவர் ஓட்டமுடியாது. ஒருவர் களைக்கும் போதும், இடை ஞ்சலின் போதும் மற்றவர் ஓட்டலாம். "திருமணம்" எனும் ஓட்டும் அனுமதி ("லைசென்ஸ்") கணவன், மனைவி இருவருக்குமே உண்டு. இந்தப் பாதை சரியல் லை, மிகக்கரடுமுரடானது என்று மனைவி கூற மறுபாதையில் போகலாம். சிவப்பு சிக்னல் வருகிறது என மனைவி தாராளமாகக் கூறலாம். அதைவிட்டு எல்லாம் தெரியும். நீ வாயை மூடியபடி வா" என்று கூறும் போது பயணம் இனி இனிமையாக அமையாது, இறுக்கமாக இருக்கும். இணக்கங்கள் உண்டாகாது. இதைக் கேட்டபடியே பின்னால் அதுவும் 3, 4 பிள்ளைகள் மனம் பெரிதும் அழுத் தம் தாக்கப்படும். அங்கு ஆக்கமான சிந்தனைகள் உருவாவதற்குப் பதிலாக அழிவுப் பாதைக்கு இடம் கொடுக்கும். மாறாக பயணம் இனிமையாக அமைந்தால் பின்னால் இருக்கும் பிள்ளைகள் மனதிலும் உற்சாகம் பிறக்கும். புதுப்புதுச் சிந்தனைகள், ஆக்க முயற்சிகள் உருவாகும். குடும்பம் என்பது ஒரு கூட்டு, ஒரு முயற்சியே. (Team work) இங்கு ஒரு ஜனநாயகமான தலைமை கட்டாயம் தேவை. அது ஒரு அழகும் கூட.

டென்மார்க்கில், ஐரோப்பிய கலாசாரத்தில் கூட தலைமைக்கு முக்கியத்துவம் உண்டு. இதற்கு உதாரணமாக என் சொந்த அனுபவங்கள் உதாரணம் கூறலாம். நானும் எனது கணவரும் 'சுப்பர் மார்க்கெட்'டில் பொருட்கள் வாங்கியபடி இருந்தோம். அருகில் ஒரு டனிஸ் தம்பதியினர் காலணிப் பிரிவில் சப்பாத்து தெரிவு செய்தபடி இருக்கும்போது டனிஸ் பெண்மணி கணவரைக் கேட்டார், "இந்தக் காலணி மிக அழகாக உள் ளது. நான் வாங்கட்டுமா?" என்று. உடன் கணவர் சிந்தித்து யோசித்தார். பின்பு "இல்லை" எனக் கூறினார். அப்பெண்ணும் சிரித்தபடியே அதை ஏற்று, இரு வரும் மற்றைய பொருட்களின் பணத்தைக்கட்டச் சென்றுவிட்டனர். இது எங் கள் கவனத்தை மிகவும் ஈர்த்தது- எங்களைப் போலவே உள்ளனர் என்று.

இதைவிட எனது 'செமினாரிய' வாழ்வில், நாம் பல தீர்மானங்களைக் கூடி இருக்கும் போது எடுப்போம். அப்போது சிலர் "நான் வீட்டில் கதைத்துத் தான் முடிவு சொல்லுவேன்", அல்லது கணவனின் பெயரைக் கூறி "அவர் என் ன சொல்வாரோ தெரியவில்லை" எனப் பதில் கூறுவார்கள், பின்னர் முடிவு சொல்வதாக. அப்போது நான் நினைப்பதுண்டு, "ஓ! இவர்கள் நல்ல பண்பான

www.tamilarangam.net

வாழ்வு வாழ்கிறார்கள்" என்று. (என்னைத் தவிர யாவருமே டனிஷ் மாணவர்கள்)

அடுத்த விடயத்திற்கு வருவோம். ஒரு குழந்தை ஒரு படத்தைக் கீறுகிறது. அல்லது ஒரு கலைப் பொருளைச் செய்கிறது, மிக அழகாகவே அமைகிறது அது. நாம் பிள்ளையை மெச்சுகின்றோம், அதன் ஆசிரியரும் அதை வெகுவாகப் புகழ்ந்து அந்தப் பொருளைச் சுவரில் மாட்டுகின்றார். குழந்தை அதைப் பார்க்கும் போதெல்லாம், 'இதை நான் செய்தேன், என்னாலும் ஏதாவது செய்யமுடியும்' என்ற உணர்வைப் பெறுகிறது. குழந்தை தன்னை நம்புகிறது. தன் பெறுமதியை உணர்கிறது. சுருக்கமாகக் கூறினால் தன்னம்பிக்கை பெறுகிறது. இந்த விடயத்தை மனோதத்துவ ஆய்வாளர் எறிக்சன் (ERIKSON) கூறுகிறார். இந்த உணர்வு, உளக்கிடும் வாழ்நாள் முழுவதும் எமது பல செயல்களால் உறுதி பெறுகிறது. இயற்கையிலேயே பெண்கள் தங்களை அழகுபடுத்தும் கலையில் வல்லவர்கள். அத்துடன் பெற்றோர் பாராட்டுதல் கிடைத்தால் கேட்கவா வேண்டும்.....? அங்கே தேவையேயாறு தன்னை அழகுபடுத்துவாள். அப்படி சபையில் உலாவும் போது கூட்டத்தில் தலைநிமிர்ந்து கம்பீரமாகப் போகிறாள் - தன்னை ஒரு ராணி என எண்ணியபடி. மாறாக அழகு குறைந்து நன்றாகப் பொசாவிடில் கூனிக் குறுகி தாழ்வு மனப்பான்மையில் இருப்பாள். இதை ஏன் நான் கூறவருகின்றேன் என்றால் உதட்டு, நக, முகச்சாயங்கள் பூசுவதற்கும் நகைகள் அணிமணிகளைப் பாவிப்பதற்கும் சில கணவன்மார் தடை விதிக்கிறார்கள். எங்கே இவள் 'கவர்ச்சி மையமாகி' பலரின் கண்வீச்சுக்கு இலக்காகி விடுவாளோ என்று.

இருவரும் ஒருவருக்கொருவர் என்ற உறுதியான மனதிடம் இருந்தால் அங்கு சலனங்களுக்கு இடமில்லை. தன் மனைவியை அழகுப்பதுமையாக் காண எந்த ஆண்மகன் தான் விரும்பமாட்டான்...? முதலில் அவனே அந்த அழகை வீட்டில் ரசித்து, "இன்று நீ மிக அழகாக உள்ளாய், நான் உன்னை மிக நேசிக்கிறேன்" என அன்புடன் அணைத்துக் கூறி, ஒரு முத்தமே கொடுத்து அனுப்புவானானால் ஆயிரம் பேரின் கண்வீச்சும் அவளை என்ன செய்துவிடமுடியும்? அவள் அந்த நினைப்பிலேயே இன்னாரின் மனைவி, இன்னாரின் மகள் என வீடு திரும்பமாட்டாளா?

கணவனின் அன்பும், ஆதரவும் தானே ஒரு பெண்ணுக்கு ஆயிரம் யானையின் பலத்தைக் கொடுப்பது. அடக்குமுறையிலும் பார்க்க அன்புக்கு மாபெரும் சக்தி உண்டு என்பதை ஒவ்வொரு கணவனும் உணரவேண்டும். இல்லறம் இவ்வாறானால் அது இருவருக்குமே ஒரு பூவிலங்கு - பொன்விலங்கு தானே....?

"என் கணவன் உதட்டுச்சாயம் பூசவேண்டாம் என, என்வீட்டில் இரண்டு நாளாகப் பிரச்சனை" என ஒரு பெண் சகோதரியை ஆதங்கப்பட்டு முறைப்பாடு கொடுப்பாளேயானால், அந்தப் பெண்ணை அந்த நிலைக்குத் தள்ளிய கணவனை முதலில் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது போன்ற பலவிடயங்கள் சகோதரியாளரின் காதுகட்குப் போயுள்ளன. (இதையே நான் 'அநாகரிகமான முடிவுகள்' என்று பின்னால் குறிப்பிடுகிறேன்) அடுத்து இப்படியான சிறுசிறு பிரச்சனைகளைச் சிறு உதவித்திணைக்களம் வரை கொண்டு போகும் அப்பெண்ணையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவள் இதை தனது புத்திசாதுரியத்தால் கெட்டித்தன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூகச் சமாளிக்க வேண்டுமே தவிர இவைகளைச் சகித்துக்கொண்டிருக்க ஆக்கக் கூடாது. இதன் விளைவு அதிக உத்தியோகத்தர் இதைத் தன் பொது சாத்தரங்கில் உரையாடுவார், பத்திரிகையாளர்கட்கு கூறுவார். நமது இவை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளில் கூடாத அபிப்பிராயங்கள் எழுதப்படும். தன் ஜாடிய தன் கண்ணைக் குத்துவதா? இதில் ஆணும் பெண்ணும் மிக விழிப்பாக இருக்க வேண்டும். அதிலும் முக்கியமாகப் பெண்கள் கவனமாக இருக்கவேண்டும். (ஆத்மபதிலும், அடிப்பதிலும்)

'ஆண் எம்மை அடிமையாக்குகிறானே' எனப் போராட்டக்குரல் எழுப்பத் தேவையில்லை, பெண் தன்நம்பிக்கையுடன் செயல்படவேண்டும். யாருக்கு யாரும் அடிமையில்லை. ஆண் பெண்ணுக்கும், பெண் ஆணுக்கும் மிகத் தேவை. சக்தியின்றி சிவம் இல்லை - சிவம் இன்றி சக்தியில்லை. செய்யும் நல்ல செயல்களை இருவரும் ஒருவருக்கொருவர் போற்றிப் புகழ்ந்து, ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி குடும்பத்தை ஒரு பல்கலைக்கழகமாக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சம்பாதிப்புக்களை மனம்விட்டு உரையாடி தத்தம் திறன்களை மாற்றங்களை ஏற்கவேண்டும். இவ்வாறு எப்பவும் மிகச் சிறந்த நண்பனாகவும், சிறந்த மாதுமியாகவும் நடக்கவேண்டும்.

பெண்கள் அநாகரீகமான முறையில் முடிவுகளை எடுப்பதற்கு முன், ஆண்கள் நிலைமைக்கு ஏற்றபடி அதிராக்கியமான முடிவுகளை எடுத்து நமது வருங்கால சந்ததியையும், நமது பாரம்பரிய கலாச்சாரத்தையும் காப்பாற்ற வேண்டும்.

நல்ல குடும்பங்களே நல்ல சந்ததிகளை உருவாக்க முடியும்! ஆகவே ஒவ்வொரு ஆண்மகனும் சிந்திக்க வேண்டியது:-

" கணவன் சொல்வதெல்லாம் அப்படியே சரியென்று ஏற்றுக் கொண்டு, அதிலேயே ஒரு பெருமையும் கண்டு வாழ்ந்து முடிக்கின்ற ஒரு பெண்ணை மனைவியாக்கி, நானு சுவர்க்கத்துக்குள்ளே ஒரு அடொல்ப் கிட்லராக இருக்க நான் விரும்பவில்லை! - - - - "

("சுயம்வரம்" 35-36 ம் பக்கம். ஆசிரியர் - கே. எஸ். துரை - ஒரு டென்மார்க் வெளியீடு)

புதிய வெளியீடு:

| நிறப்பிரிகை | NIRAPPIRIHAI |
| --- | --- |
| அஞ்சல்பெட்டி எண் : 192 | Post Box No : 192 |
| பாண்டிச்சேரி | Pondicherry |
| 605 001. | 605 001. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சஞ்சீவி ஆசிரியர் குழுவுக்கு,

வணக்கம்!

சஞ்சீவி 23 வது இதழ் வாசித்தோம். "இன்னுமா ஏன்" என்னும் சுமதியின் கட்டுரை படித்தோம். ஒற்றை வரியில் கூறுவதாயின் ஆண் சாதீயக் கோசம் தவிர வேறெதுவும் இக்கட்டுரையில் காணவில்லை. தொடர்ந்து சுமதியின் கட்டுரையினை ஆராய்வதூடாக இக்கட்டுரையின் குறைபாட்டினை சுட்டிக் காட்டுவதோடு, காலத்தால் அவசியமாக்கப்பட்டுள்ள மேலும் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள முனைகிறோம்.

நமது இச்சமகாலத்தில் பல சஞ்சிகைகளாயும் ஆண் + பெண் உட்பட பல உதிரிகளாயும், பெண் விடுதலையின் அவசியம் பற்றி எழுதுவதும், விவாதிப்பதும் நடைபெற்று வருவது கண் கூடு. ஐரோப்பிய நாடுகளில் வெளிவரும் சக்தி, தேனீ போன்ற பெண்கள் பத்திரிகையும் இதனுள் அடங்கும்.

மூன்றாவது பாதைக்கான வேலைத்திட்டம் விவாதிக்கப்பட்டு ஐக்கிய முன்னணி கட்டப்படுகின்றது. பாட்டாளி வர்க்கக் கோசத்தை மிகைப்படுத்தாத அரசியலுக்குப் பயன்படுத்தாது பாதுகாப்பதில் யாவரும் கவனமாயிருப்பது நன்கு புலப்படுகின்றது. முஸ்லீம் மக்களது சுயநிர்ணய உரிமை, மலையக மக்களது சுயநிர்ணய உரிமை, சிங்களப் பாட்டாளி வர்க்கம் பற்றிய பார்வை, இந்தியா போன்ற நாடுகளில் தொடர்பு வைத்திருக்க வேண்டிய தேசசக்திகள் நல்ல பல இலகுவும் தெளிவும் நம் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது தெரிகின்றது. யாழ்ப்பாணத் தமிழர்களின் மனோநிலையில் கிழக்கு மாகாண மக்கள் பற்றிய இழிவுப்பார்வையை மனம் திறந்து விவாதிக்கும் நிலைக்கு வந்துள்ளோம். இவைகள் யாவும் கடந்த காலப் போராட்டத்தில் விட்ட தவறுகளை படிப்பினைகளின் மூலம் புரிந்து கொண்டு நிவர்த்தி செய்ய முனையும் ஒரு நல்ல அரசியல் பண்பாகும். ஆனால் மிகப் பெரிய குறைபாடாக இது வரைக்கும் நம் மத்தியில் இருப்பது, தமிழீழப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் விடுதலை ஒரு வகை சீர்திருத்தக் கோசமாக இருந்து வந்துள்ளது.

தமிழீழப் போராட்டத்தை வர்க்கப் போராட்டத்தோடு இணைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் இவ் வேளையிலும், பெண் விடுதலையை வர்க்கப் போராட்டத்தோடு இணைக்க வேண்டிய விஞ்ஞான பூர்வமான விதியை, நடைமுறைப்படுத்த முனையும் ஆரம்பப் பண்பு அற்று நிற்பதை காண முடிகிறது. இது தேச விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் விழிப்புணர்வு, நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தை உடைக்கும் அளவிற்கு வலுவற்றதாக இருப்பதுவும், புரட்சிகர முற்போக்கு அரசியல் சக்திகளின் பெண் பற்றிய குறைப்பார்வையுமேயாகும். மேற்குறிப்பிட்ட இவ்விரண்டு விடயங்களும் பல வடிவங்களாகப் பரிணமிப்பதை நாம் காணலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலப்பிரபுத்துவ கலாச்சாரப் பண்புகளை பூரணமாக உடைக்க முனையும் உதிரிப் பெண்நிலை வாதிகளில் சிலர் கூட, அதற்கு மாற்றீடாக மேற்கத்தைய சீரழிவுக் கலாச்சாரத்தை முன் வைக்கின்றனர்.

பெண் ஒடுக்குமுறை என்பது ஆண் + பெண் உட்பட்ட ஒட்டுமொத்த சமூகத்திலும் வேரூன்றியுள்ள பிற்போக்குக் கலாச்சாரத்தின் வெளிப்பாடேயாகும். தனது மகனின் மணப் பெண்ணிடமிருந்து வரதட்சணையை எதிர்பார்க்கும் பெண்ணாகிய தாயையும் நாம் காண்கிறோம். பிள்ளைக்கு வரதட்சணை கொடுக்காமல் தமது மகளுக்குத் திருமணம் செய்து கொடுத்தல் கௌரவக் குறைவானது என எண்ணும் பெற்றோரையும் நாம் காண்கிறோம். விதவைப் பெண்ணைத் திருமணம் செய்யும் ஆண்களும் சிலர் சமூகத்தில் உள்ளனர். விதவைப் பெண்ணைத் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பாத பெண்ணான தாயையும் நாம் காண்கிறோம். கூட்டிக் கழித்துப் பார்த்தால் மொத்தத்தில் பெண் ஒடுக்கப்படுகிறாள் என்பது உண்மையே.

நிலப்பிரபுத்துவ, பிற்போக்கு கலாச்சாரத்தை உடைத்தெறிந்து, இச் சமூகக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வர்க்கப் போராட்டத்தை வலியுறுத்தி, சரியான பாட்டாளி வர்க்க கட்சியோடு, சித்தாந்த குறைபாடற்ற மக்களோடு, ஒன்று கலந்து போராடுவதனூடாகவே ஆணாதிக்கத்தை வெல்ல முடியும். இதை விடுத்து, சுமதியின் கட்டுரையில் வெளிப்படுவது போல் ஆண்களை எதிரியாகக் காட்ட முனைவது சமூக, பொருளாதார, அரசியல் நிலைப்பாட்டில் இருந்து பெண் விடுதலையை நோக்காது, வெறும் பாமரத்தனமாக அமைவது மாத்திரமன்றி பெண்களை அணி திரட்டுவதிலிருந்து திசை திருப்புகிறது.

சுமதியின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நிதர்சனமானவையே. இது போன்ற நிகழ்வுக் கோர்வைகளைத் தாங்கிய பல கட்டுரைகள் ஆங்காங்கே பெண்களால் வெளியிடப்படுகின்றன.

இவை எதுவும் பெண்களுக்கான ஸ்தாபன உருவாக்கத்தின் அவசியம் பற்றியோ, புரட்சிகர பாட்டாளி வர்க்க அரசியல் கட்சியில் இணைந்து கொள்ள வேண்டிய தேவை பற்றியோ, சுரண்டப்படும், ஒடுக்கப்படும் பெண்கள் பிரிவின் தலைமையில் இணைந்து பரந்துபட்ட பெண்கள் மத்தியில் ஈடுபட வேண்டிய வேலைத்திட்டம் பற்றியோ யாரும் கருத்துக் கூறக் கூட முயற்சிப்பதாகவும் தெரியவில்லை.

தமிழ்ப் பெண்கள் சிறுவர்களும், கடல் மீன் கருவாடு பதனிடப்படுத்தலிலும், பிய்ந்து போன மீன்பிடி வலைகளை பின்னும் வேலைகளிலும், வயல்களில் களை பிடுங்குதல் போன்ற தொழில்களில் ஆண்களை விட குறைவான ஊதியம் பெறுவதும், பாய் பின்னுதல், கைத் தறி நெசவுக்கு நூல் சுற்றுதல் போன்ற சில தொழில்களை பெண்களுக்காகவே ஒதுக்கி குறைந்த விலையில் கொள்வனவு செய்தல் போன்ற விடயங்கள் நமது நாட்டில் நடப்பது ஐரோப்பிய பெண்ணிலைவாதிகட்கு தெரியவில்லை, அல்லது பெண் ஒடுக்குமுறையாக இதை

www.tamilarangam.net

இவர்கள் கண்டிருக்கவில்லையோ தெரியாது. ஏனெனில் பெண்விடுதலை பற்றிய கட்டுரைகள் அனைத்தும் குறுகிய வட்டத்திலுள்ளன நிற்கின்றன. கட்டுரையாளர் சமூக, பொருளாதார, அரசியலை வலியுறுத்தாது ஆண்களால் நடக்கும் கொடுமைகளை மாத்திரம் குறிப்பிடுவதிலிருந்து குறையான சமூகப்பார்வை கொண்டதாகவும், கட்டுரை முழுமை பெறாமல் திசையற்று நிற்பதும் தோன்றுகின்றது.

தொடர்ந்து மேற்குறிப்பிட்ட கட்டுரையில் குறிப்பிட்டுள்ள விளம்பரங்களில் பெண்கள் கவர்ச்சியான பாத்திரங்களின் மூலம், வியாபாரப் பொருளாகவும், விளம்பரப் பொருளாகவும் பாவிக்கப்ப தாகக் குறிப்பிட்ட ஒரு விடயத்தை மாத்திரம் எடுப்போமாயின் சுரண்டும் வர்க்கம் கை கோர்த்து நம்மை எதிர்ப்பது நன்கு உணரலாம்.

நிலப்பிரபுத்துவத்தின் பிற்போக்குக் கலாச்சாரப் பண்புகளும், V.D.O திரைப்படம், Cable போன்ற மேற்கத்தைய கலாச்சார இறக்குமதியும் இணைந்து மக்களைச் சுரண்டி சீரழிப்பதோடு பெண்களை வியாபாரப் பண்டமாகவும் குறிப்பிடுகின்றது. உ+ம். இந்துக் கோயில்களில் நடக்கும் திருவிழாக் காலங்களில் தென்னிந்திய இறக்குமதியான அரை நிர்வாணத்திரைப்படம் V.D.O மூலம் பக்தர்களுக்குக் காட்டப்படுவதை நாம் அறிவோம். இதை கோயில் நிர்வாகமோ, மதகுருமார்களோ எதிர்ப்பதில்லை. நாட்டுக் கூத்து, கிராமிய நடனம், நாடகம் போன்ற சமூக முரண்பாடுகளை எடுத்தியம்புவதையும், தொழில் சார்ந்த கலைத்துறைகளான மேற்கூறியனவற்றையும் நிராகரித்து இவைகள் நடக்கின்றன. சாய்பாபாவின் பஜனையும் இது போன்ற சீரழிவுகளைக் கொண்டு வந்ததையாவரும் அறிவர்.

இச்சீரழிவுக் கலாச்சாரத்தையும், பிற்போக்கான கலாச்சாரத்தையும் இடதுசாரிகள் மாத்திரமே தீவிரமாக எதிர்க்கின்றனர். நிலப்பிரபுத்துவ பிற்போக்கு கலாச்சாரத்தை கட்டிக்காப்போர் ஒரு போதும் மேற்கத்தைய சீரழிவுக் கலாச்சாரத்தை எதிர்ப்பதில்லை. மாறாக அவர்களுக்குள் பரஸ்பரம் சமரசம் செய்து கொள்கின்றனர். இது போன்றே எமது அனைத்து கலை, கலாச்சாரத் துறைகளையும் பிரித்துப் பார்க்க முடியும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் பெண்மீது ஆணின் ஆதிக்கம் வெளிவருகின்ற போதும், இது ஒரு வர்க்கத்தின் சுரண்டும் தேவை கருதிய தென்பதால் வர்க்கப் போராட்டத்தின் மூலமே பெண்விடுதலையை வென்றெடுக்க முடியும். நிலப்பிரபுத்துவத்தின் தகர்வும், முதலாளித்துவ தொழில் துறையின் வளர்ச்சியும் தனது தேவைக்கேற்ப பெண்களுக்குச் சில உரிமைகளை வழங்கியுள்ளது. (புலிகள் பெண் போராளிகளை சேர்த்துக் கொண்டது போல) நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பெண் அடக்கி வைக்கப் பட்டிருந்தாள். முதலாளித்துவம் சில உரிமைகளினூடாக பெண்ணை மானபங்கப்படுத்தியுள்ளது.

சுரண்டலின் தேவையினை ஒட்டிய ஆண் ஆதிக்கத்தை சுரண்டலுக்கெதிரான போராட்டத்தில் மாத்திரமே வெல்ல முடியும். சமூகத்தின் அவசியமான இத்தேவையை கவனத்தில் கொண்டு, பெண்களை அரசியல் மயப்படுத்தி, பெண்ணுரிமைகளைப் பெண்களே வெல்லக் கூடிய வகை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் ஒரு பலமான மகளிர் அணியை உருவாக்கி, புரட்சிகர அரசியலில் பெண்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்க முன்வர வேண்டும். கடந்த காலங்களில் போலல்லாது மகளிர் அமைப்பு பல மட்ட புரட்சிகர அரசியல் சக்திகள் ஆவன செய்ய வேண்டும். முதலாளித்துவ சீர்திருத்தத்தை பெண் விடுதலையாகக் காட்டி கட்டுரைகள் வெளியிடுவதையும் உணர்ந்து பெண்கள் திருத்த வேண்டும். நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமுதாயத்தில் சுரண்டப்படுவோர்க்கும், சுரண்டுவோர்க்குமிடைப்பட்ட வர்க்கப் பகைமையும், வர்க்கப் போராட்டமுமே உண்மையான பெண் விடுதலையை வென்று வழி வகுக்கும் என்னும் விஞ்ஞான பூர்வமான ஆய்வுக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். கம்யூனிசப் பெண்கள் அமைப்பாக தங்களை அறிமுகம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்வரலாற்றுக் கடமையை உணர்ந்து மகளிர் ஸ்தாபனம் ஒன்றை உருவாக்கி அடிப்படை வேலைத்திட்டங்களை அமைக்காவிடின், தமிழீழப் பெண்கள், புலிகளிடம் ஏமாந்த போராளிப் பெண்களைப் போல், திக்குத்தெரியாது ஆண்களின் கட்டளையை நிறைவேற்றுபவர்களாகவே தொடர்ந்திருப்பர்.

பெண்களை அனைத்துத் துறைகளிலும் வளர்த்தெடுக்க முனையாத எந்தவொரு கட்சியும் உண்மையான புரட்சிகர கட்சியாக அமையப் போவதில்லை. மாறாக கட்சியும் சீரழிந்தே போகும்.

நன்றி

"சமர்" ஆசிரியர் குழு.

# அறிவித்தல்

இன்று ஐரோப்பியச் சூழலில் பெண்ணியம் தொடர்பாக தமிழர்கள் பலராலும், கருத்துக்கள் கூறப்பட்டு வருகிறது. இருப்பினும், எமக்குக் கிடைக்கும் பத்திரிகைகளில் பெண்ணியம் தொடர்பாக பெரியார், பூலே, அம்பேத்கார், மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோரது கருத்துக்களும், பெண்ணியம் தொடர்பான விவாத, பிரதிவாதங்களும் அடங்கிய தொகுப்பு ஒன்றினை வெளியிட உள்ளோம். பிரதிகள் தேவையெனக் கருதுவோர் 50KR சஞ்சிகையின் முகவரிக்கு முன்பே அனுப்பி வைத்துப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Girokonto 3653528
CHANCHIYE
DANMARKS GADE-10
7500 HOLSTEBRO. D.K.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாவும் கற்பனையல்ல...

**மீரா**

சித்திரை புலர்ந்த அந்தக் காலைப் பொழுதில் எமது கார் விமான நிலையத்தை நோக்கி "விர்"ரெனச் சென்று கொண்டிருந்தது. வீதியில் நிலவிய அமைதியைப் போலவே காரினுள்ளேயும். மூன்று மாதத்தை முடித்த என் மாமனார் திரும்பிக் கொண்டிருக்கிறார். சென்ற முறை இதேபோல் மனைவியின் தம்பியாரை கனடா அனுப்புவதற்காகக் கூட்டிச் சென்ற போது இவ்வாறு அமைதியாய் இருக்கவில்லை. கார் அட்டகாசமாக இருந்தது. மனைவி, மாமனார், மைத்துனர் என் இரட்டைப் பிள்ளைகள் அனைவரும் குதூகலித்துக் கொண்டிருந்தார்கள். கனடாவிலிருந்து டென்மார்க் வந்து திரும்புவது ஓர் பிரிவுபோல் இல்லையோ என்னவோ..... மீண்டும் திரும்பி வர உத்தரவாதம் உள்ளது என்ற உறுதியோ..... அந்தப் பயணம் அப்படி ஒரு மகிழ்ச்சியானதாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை வேறுமாதிரி. வீட்டை விட்டுப் புறப்படும் போதே மனைவி அழுது விம்மலைப் பார்த்திருக்க வேண்டும். அவர்களும் காரின் இரு மூலைகளிலும் வைத்திருக்கப்பட்ட பொம்மைகள் போல ஆட்ட அசைவின்றி இருந்தார்கள்.

என் மாமனார் வந்தது குளிர் காலமோ என்னவோ, அவரின் டென்மார்க் விஜயம் கூடியளவு அவருக்கென்று ஒதுக்கப்பட்ட அறையுள்ளேயே கடந்தது. எம் குழந்தைகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்தைத் தவிர வெளியில் டென்மார்க்கை 2,3 நாட்களுக்கு மேல் பார்த்திருக்கமாட்டார். HOLIDAY ON ICE ஓர் நாள்; PLANTORIUM ல் படம் இன்னொரு நாள், மற்றும்படி நாம் காலையில் வெளிச்செல்ல அவர் முகம் சுருங்கும், மாலையில் திரும்பி வரும் போது அவர் முகம் மலரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வெளியில் போய் வாழ்கிறவன்" ஒர் நாள் கேட்டேன். "கதவைத் திறக்க குளிர் நாய் போல பாஞ்சுக்க வருகுது" என்றார். வ.ஐ.ச ஜெயபாலன் எழுதிய, "குளிர் சவுக்கு கொண்டு சொடுக்கி அடிக்கும்" என்ற வரிகள் ஞாபகத்துக்கு வந்தது.

ஆனால் உண்மையில் இலங்கையை விட்டுப் பிரிந்து வந்தது என்ற ஏக்கம் தான் அவரை எங்கும் அசையவிடவில்லை. பிள்ளைகளின் பிறந்த நாட்களுக்கு மகன் கனடாவில் இருந்து வந்த போது, ஆறு வருடத்திற்குப் பின் சந்தித்த மகிழ்ச்சி இரண்டொரு நாட்கள் இருந்தாலும் மீண்டும் அசைவிழந்தவர் தான்.

என் பிள்ளைகளுக்கு இருவரும் புதுமுகங்கள் தான். ஆனால் 3 மாத விசாவில் வந்த மாமனாரைவிட 3 கிழமை விசாவில் வந்த மைத்துனருடன் கூட ஒட்டினார்கள். "பிள்ளைகள் வந்து ஒட்டுகின்றார்கள் இல்லை" என்பது மாமனார் குறை. "சும்மா இருக்க விடுகிறார்களாயில்லை" என்பது மைத்துனரின் செல்லக் கண்டிப்பு.

மொத்தத்தில் இருவரின் விஜயமும் என் பிள்ளைகளில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

"ஏன் நீங்கள் கனடாவில் இருக்கிறியள்?"
"ஏன் நீங்கள் சிறீலங்காவில் இருக்கிறியள்?"
"அம்மம்மா எங்கே?"
"ஏன் உங்களுக்கு HVID HÅR, மாமாவுக்கு SORT HÅR" என பதில் கூறக் கூடியதும், முடியாததுமான கேள்வி பதில்களுடன் அவர்கள் வாழ்வும் இந்த 3 மாதமும் சென்று கொண்டிருந்தது.

இப்போது நாம் விமான நிலையத்தை நெருங்கி விட்டோம்.

மாமனாரும், மனைவியும் போட்டி போட்டுக் கொண்டு அணைகட்டி வைத்திருப்பன எல்லாம் எந்த வேளையிலும் உடைந்து விடும் போல் தெரிந்தது.

மெதுவாக சாமான்களை இறக்கிக் கொண்டு உள்ளே போகின்றோம். காலையில் எம் விமானத்தைத் தவிர அந்த வேளையில் வேறு விமானங்கள் செல்வதாக இருக்கவில்லை. முழு அமைதி நிலவியது. நான் மாமனாரைக் கூட்டிக் கொண்டு ரிக்கற் கவுண்டருக்குச் செல்கிறேன். மனைவி தாயோடு துணையாக.....

என் குழந்தைகள் மட்டும் விமான நிலையத்தின் இரு பக்கத்துக்கும் மாறி, மாறி ஓடுகிறார்கள். விளையாட்டிடை என முதலில் நினைத்தேன். ஆனால் அவர்களின் செயலில் ஒர் தேடல் இருந்தது. மேடையாக ஆட்கள் ஏறிச் செல்லும் படிக்கட்டடியில் சென்று மேலே பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். பின்பு மீண்டும் ஏர்போட் ரிக்கற் கவுண்டரிலும் அவர்கள் தேடல் தொடர்ந்தது.



தொடர்ச்சி 29ம் பக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்

சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு,

உங்கள் முத்திரையுடன் யு.என்.ஓ அனுப்புவதற்கான ஒரு விண்ணப்பம் கிடைக்கப்பெற்றோம். அவை தொடர்பாக சில கருத்துக்களை நாம் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம்.

ஐக்கிய நாட்டு சபைக்கு ஊடான சமாதானம் என்பதை வலியுறுத்தி கையெழுத்தை கோரியிருந்தீர்கள். இதேகோரிக்கையை புலிகள் கோரிவருகின்றனர். ஐக்கிய நாட்டு சபையேதோ மனிதாபிமான ஒரு நிறுவனம் என்றமாயை மக்களுக்கு ஏற்படுத்தி மீண்டும் ஒரு ஆக்கிரமிப்பை கோருவதே. இதேபோன்றே முன்பு இயக்கங்கள், மக்கள் இந்தியாபற்றி மாயையை மக்கள் முன் வைத்து இந்தியாவை வரவைத்து இலங்கைமண்ணை இரத்தக்காடாக்கினர். இதை மீண்டு ஐக்கிய நாட்டு படையை கோருவதனூடாக மீண்டும் இரத்தக்காடாக்க முனையாதீர்கள்.

ஐக்கிய நாடு என்பது என்ன? உலகில் அதிகூடிய மனித உரிமையை மீறும், அமெரிக்கா தலைமையிலான ஒரு கொலைகாரர்களே. அமெரிக்கா தலையாய் இருந்து இன்று ஈராக், சோமாலியா, யூக்கோசிலாவியா, கம்பூச்சியா.... என இன்று ஆக்கிரமிப்பு போரை நடாத்தியபடி கொள்ளையடிப்பவர்களே. ஐக்கியநாட்டுப்படை என்பது இந்தியா உட்பட்டதே. இலங்கையில் தலையீடு எழும்போது இந்தியப்படை அற்றதீர்வு சாத்தியமற்றதே இன்று உலகின் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள ஐக்கியநாட்டுப்படைகள் மீது மக்கள் வீரஞ்செறிந்த போராட்டங்களைத்தொடுத்துள்ளனர். இவைகளை கவனத்தில் எடுக்காது ஐக்கிய நாட்டைக்கோருவதென்பது தற்கொலைக்கு ஒப்பானதே. இன்று புலிகள், அரசு என இரட்டைப்பிடிக்குள் மக்கள் நசுங்குவது கண்கூடு. அதை முறியடிக்க மக்களையே சார்ந்து இருக்கவேண்டும்.

—சமர் ஆசிரியர்குழு.
26.07.93



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் குழுவினருக்கு,

வணக்கம். சஞ்சீவி '93 பங்குனி–சித்திரை' இதழ் 23 கிடைத்தது. அத்துடன் எதுவிதமான கடிதமோ குறிப்போ இருக்கவில்லை. எனவே ஒருவேளை என் கருத்துக்களை அறியவேண்டி அனுப்பினீர்களென வகிக்கிறேன். என் சுருக்கமான குறிப்புக்கள் கீழ்வுள்ளன. அவற்றாற்பயன் இருப்பின் திருப்தி.

* பத்திரிகையின் அமைப்பிற்கடந்த ஆண்டிற்குள் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மகிழ்வூட்டுகிறது. விரைவிற்கணனிஅச்சு அல்லது மின்தட்டச்சு முறையில் பதிப்பீர்கள் என நம்புகிறேன். அதன்மூலம் உள்ளடக்கத்தின் அளவு அதிகரிப்பதும் தோற்றம் மேலும் பொலிவுபெறுவதும் சாத்தியமாகும் என்பது என் மதிப்பீடு.
  சுமதி எழுதிய கட்டுரைபோன்று மேலும் பல வரவேண்டும்.

* வளவன் கவிதையில் சொற்பிழைகள் சிலவுள்ளன. "மெல்ல(ப்) பொரும்"பின் அடைப்புக்குறியின் தேவை விளங்கவில்லை. "அடிவானம் சிவக்கும்" கொஞ்சம் குழப்பமான படைப்பு. லோகநாதன், தன் கவிதையின் அமைப்புப்பற்றி கூடியகவனம் காட்டியிருப்பின், சற்றே எடுப்பாக அமைந்திருக்கும். சொற்பிழைகள் அதிகம். இளவாலை விஜயேந்திரனின் கவிதையை வெகுநாட்களின்பின் காண்கிறேன். எதிர்பாராத விருந்து. இன்னமும் எழுதுவாராக.

* "மேத்தா இன்னுங்கவிதை எழுதவில்லை!!" என்று குறிப்பிட்டவர் மரபுக்கவிதையின் 'ஆதரவாளர்' அல்ல என்றே நினைக்கின்றேன். யாரென்று மறந்துவிட்டேன், ஆயினும் மேற்கூறியது சரியென்றே நம்புகிறேன். மேத்தாவின் 'புத்திசாலித்தனமான' பிரகடனங்கள் எல்லாம் கவிதைகளானால் அவ்வாறாயின், கருணாநிதி வகையறாக்களின் சினிமா/அரசியல் அடுக்குமொழிகளும் அவர்களாற்பொடிவைத்து எழுதப்பட்ட வசனங்களுங்கூடக்கவிதைகளாகிவிடும்.

* சிறுகதைக்கும் விரிவுரைக்கும் வித்தியாசம் இருக்கிறதோ என்று நினைத்தேன்.

* க. நா. சுப்பிரமணியம் யாரென்ற அறிமுகம் இல்லாமலும் அவரது பேட்டி எப்போது முதலிற்பிரசுரமானது என்ற விளக்கமில்லாதும் பேட்டி பிரசுரமாகியுள்ளமை வாசகர்கட்கு அதிகளவு உதவாது.

* சண்முகதாசன் பற்றிய கட்டுரையிற் பேர்கள், சம்பவங்கள் சில தவறாகவும் பல விளக்கங்கள் அகச்சார்புடனும் எழுதப்பட்டுள்ளன.

7ம் பக்கத் தொடர்ச்சி!

பிரதான குறிக்கோள் என்று குறிப்பிட்டார்.

இந்த பத்தாண்டு கால தமிழ் மக்களின் ஜீவமரணப் போராட்ட வாழ்வு, தமிழீழத்திலும், அதற்கு வெளியேயும் அகதிகளாக வாழ்ந்த வாழ்க்கையின் படிப்பினையைப் பெற்றுள்ளோம் என்று எல்லோரும் சிந்திக்க கடமைப் பட்டுள்ளோம்.

ஆசிரியர்குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*தங்கருபன் சீனாவிலும், ரஷ்யாவிலும் என்ன பிழையாகப்போனதெ-ன்று தன் கருத்தைக்கூறுகிறார். ஸ்டாலின், மாஓ என்ற இரண்டுபேர் இறந்தவுடன் எவ்வாறு இரு சமுதாயங்கள் தலைகீழாகமாற நே-ர்ந்தது? கலாச்சாரப்புரட்சியை மாஓ ஏன் முடிவுகட்டினார்? டெ-ங்கை அவரே மீண்டும் பதவியில் அமர்த்தியது ஏன்? மாஓ அதிகா-ரத்தில் இருந்தபோதுதான் (1971இல்) ஜே.வி.பி கிளர்ச்சியில் ஈடுபட்டது. அன்று சீனா மேற்கொண்ட அயற்கொள்கை நிலைப்-பாட்டுக்கும் இன்று மேற்கொள்வதற்குமிடையிலான வேறுபாடு என்ன? 1989 எழுச்சிபற்றி ஆசிரியரது மதிப்பீடு அவரால் மேலும் விரிவுபடுத்தப்படுவது நல்லது. புதிய ஜனநாயகக்கட்சி (இடது) என எழுதியுள்ளார். அங்கும் இன்னொரு பிளவு ஏற்பட்டுவிட்டதா? அறிய விரும்புகிறேன். "பாஸிஸ்டு" என்ற பதம் ஒரு நிந்தனைச்சொல்லா-கப்பயன்பட்டுள்ளமையேயன்றி ஆழமான கருத்தில் பயன்படவில்லை. கட்டுரை ஆசிரியர் வசைச்சொற்கள் போதாமல் அவஸ்தைப்படு-கிறாராயின் நிறையச்சொற்களை தன்வசம் வைத்திருக்கிற ஒருவ-ருடன் தொடர்புபடுத்திவிடுகிறேன்.

—சிவசேகரம்.
02.07.1993.

---

அன்பின் சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு,

இத்துடன் ஒரு கட்டுரை அனுப்புகின்றேன், 'சுமதி' இதை ஆரம்பித்துவைத்தார். இதற்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்காமல் இதை ஒரு விவாத தலைப்பு ஆக்கி பலரின் நல்ல கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்கூறி சஞ்சீவி தன் சேவையில் இன்னும் ஒருபடி உயரவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

வாழ்க! வளர்க! உங்கள் பணி.

—வேதா. இலங்காதிலகம்.

---

அன்புடன் ஆசிரியர் குழுவினருக்கு,

சஞ்சீவி கடைசி இதழில் 'ஹோமா' என்கின்ற என் சிறு கதை தொடர்பாக திரு. கரவைதாஸன் அவர்கள் கதையில் முக்கிய பெயர்களை பாவித்ததற்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தார். உங்களின் அன்புமிகு ஆட்சேபத்திற்கு நன்றி. ஆனாலும்கூட, ஒருவட்டத்திற்குள் நின்று சிந்திப்பார் எனக்கட்டளையிடுவதோ, சமூக, தனிமனித பிரச்சனைகள் கந்தப்பிள்ளைக்கும், வள்ளிப்பிள்ளைக்கும் மட்டுமானதல்ல. கந்தப்பிள்-ளையும், வள்ளிப்பிள்ளையும் எனது பார்வையில் பதியும்பொழுது நிச்-சயம் கரவைதாஸனின் ஆவலை பூர்த்திசெய்கின்றேன்.

—உதயபாபதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டென்மார்க்கில்
# தமிழ்மொழிக் கல்வியும்/பிரச்சனைகளும்
## ஓர் மதிப்பீடு

-முல்லையூரான்-

டென்மார்க்கில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழ் அகதிக் குழந்தைகளின் "தாய் மொழிக்கல்வி" தொடர்பாக அத்தகைய மொழிப் பாடசாலைகளில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பாக, (தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் - 25 தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு) இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

டென்மார்க்கின் பல பாகங்களிலும் தனித்தனியாக இயங்கிவரும் பாடசாலைகளின் ஆசிரியர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களின்படி - தமிழ் மொழியினை கற்பிப்பதில் ஆசிரியர்களும்/மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகளை வகைப்படுத்து முன்பாக; டென்மார்க்கின் தமிழ்மொழிக் கல்வி தொடர்பாக நிலவி வரும் உண்மைகள் சிலவற்றை கூறிக்கொண்டு செல்லுதல் அவசியமாகின்றது.

டென்மார்க்கில் இயங்கிவருவனவும் எங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 25 பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையிலும் STATISTIK ÅR BOG - "BEFOLKNING OG VALG" எனும் பகுதியிலிருந்து பெறப்பட்ட புள்ளி விபரங்களின் படியும் ஓர் அண்ணளவு மதிப்பீட்டில் பின்வரும் அட்டவணையை தயாரிக்க முடிந்தது.

| விபரம் | வயது | | | பால் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | 5-9 | 10-14 | 15-19 | ஆண் | பெண் | |
| 1. தை 1992ன் புள்ளி விபரப்படி டென்மார்க்கில் உள்வர்கள். | 592 | 429 | 252 | 628 | 645 | 1273 |
| தாய் மொழிக் கல்விக்கு செல்வோர் (25 பாடசாலை) | 171 | 248 | 66 | 236 | 249 | 485 |
| தாய் மொழிக்கல்வி பெறாதவர்கள் விகிதத்தில் | 71.2% | 57.1% | 73.9% | 62.5% | 61.4% | 61.1% |

மேற்காணும் அட்டவணை காட்டுவதன்படி, சுமார் 61.1% மாணவர்கள் தமிழ்மொழிக் கல்வியினை பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை என்றோ, அல்லது அந்த வசதியினைப் பெறமுடியாதவர்களாக உள்ளாரென்பது தெளிவாகின்றது. இதில் உண்மையெதுவெனின் "டென்மார்க்கின் பல பாகங்களிலும் சிதறி வாழும் இலங்கைத் தமிழ் அகதிக் குழந்தைகளுக்கு தாய்மொழிக் கல்வி பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதாகும். தாய் மொழிக் கல்வி பற்றிய சட்டங்கள் மாற்றியமைக் கப்பட்டமையே இதற்கு அடிப்படைக் காரணமாகலாம். ஆக தாய்மொழிக் கல்வித் திட்டத்தின் கீழ்வரும் இத் தமிழ்மொழிக் கல்விப் பாடசாலைகள் இன்னமும் விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை இக்கட்டுரை வலியுறுத்த விரும்புகின்றது.

மேலும் தற்போது இயங்கிவரும் பாடசாலைகளில் இடம்பெற்றுள்ள சிக்கல்கள் பிரச்சனைகளை கட்டுரை வசதிகருதி பின்வருமாறு வகைப்படுத்துவோம்.

1. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்
2. வகுப்பறைகளின் வசதியீனங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 1. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

1. I பெரும்பாலான ஆசிரியர்கள் குறைந்த வேதனம் பெறுவதாகவும் அதேவேளை அவர்களின் தொழில்நேரம் குறைவாக இருப்பதாகவும் குறைபட்டுக் கொள்கிறார்கள். பலதரப்பட்ட வயதினரும், பலதரப்பட்ட மொழியறிவுடனும் வகுப்பறைகளை செயற்படுத்தவேண்டிய கட்டாய நிலையை ஆசிரியர்கள் எதிர நோக்குவதினால், அவர்களுடைய உழைப்பு-பாடசாலைக்குள்ளும் வெளியேயும் அதிகமாக வேண்டப்படுகின்றது. ஆசிரியர் ஒருவர் தனது நேரத்தினை மட்டுப்படுத்தி ஒரேநேர வகுப்பறைக்காக பலதரப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சித் திட்டமிடுகை யிலும், பாடத்திட்டமிடுகையிலும் ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2. II திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களின்படி 25 ஆசிரியர்களில் 5 ஆசிரியர்கள் தன் தாய்நாட்டில் ஆசிரியத் தொழில் அனுபவம் இல்லாதவராகக் காணப்படுகின்றார்கள். அதேவேளை ஏனைய 20 பேரில் (ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் 25) மிகக் குறைந்த தொகையினரே ஆசிரியப் பயிற்சியைப் பெற்றுமுடித்தவர்கள். சிலர் உயர்கல்வி பெற்றிருந்தாலும் ஆசிரியர் பயிற்சி நெறியைப் பெறாதவர்களாக காணப்படு கின்றார்கள். ஆக மொத்தமாக ஆசிரியர்களுக்கு "பயிற்சி நெறி" ஒன்றின் முக்கியத் தினை இக்கட்டுரையில் வலியுறுத்துவது அவசியமாகின்றது.

அத்துடனன்றி, பிறிதொரு கலாச்சார, மொழி அனுபவத்தில் பெற்ற ஒரு பயிற்சி ஒன்றினை இன்னொரு கலாச்சார மொழி, பண்பாடுகளுக்கமைவாக பயிற்சி நெறி ஒன்றின் அவசியத்தினை பெரும்பாலான ஆசிரியர்கள் முன்வைக்கின்றனர். அன்றேல் அதன் தேவையை உணர்பவர்களாக உள்ளனர்.

1. III தற்போது டென்மார்க்கில் இயங்கிவரும் பாடசாலைகளில் பாவனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் "நூல்"களை விதந்துரை செய்வோமானால்,

a. பன்னெடுங்காலமாக சீரமைப்புக்குள்ளாக்கப்படாத இலங்கைப் பாடநூல்கள்,
b.. இந்தியத் தமிழ்ப் பாடநூல்கள்.
c. பிற நாட்டு தமிழ் நூல்கள். உ+ம் சிங்கப்பூர்/மலேசியா

இத்தகைய நிலைமையிலேயே தமிழ்ப் பாடசாலைகளில் நூல்கள் தருவிக்கப்பட்டு கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பாடசாலைகளுக்குப் பாடசாலை ஓர் ஒருங்கிணைவோ அன்றேல் ஒரு பொதுமைப்பாட்டினையே காண்பதில் சிரமமுண்டு. அதுவுமல்லாமல் இத்தகைய நூல்களின் பிரயோகத்தினால் மொழியியல் ரீதியில் பெரும் வேறுபாடுடைய நாடுகளிலிருந்து பெறப்படும் இத்தகைய கல்விமுறையில் தமிழ் அகதிக் குழந்தைகள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

1. IV மேற்கண்ட பிரச்சனையை தீர்வுக்குக் கொண்டு வருமுகமாக அனேக ஆசிரியர்கள் "ஒரு பொதுப்பாடத்திட்டம்" ஒன்றின் தேவையை மிகவும் வலியுறுத்தி வருகின்றனர். பொதுப்பாடத்திட்டம் எல்லாப் பாடசாலைகளிலும் பொதுவான பாடநூல்களின்மையினால் ஆசிரிய/மாணவர்கள் பொதுப்பரீட்சை ஒன்றின்கீழ் கொண்டுவரப்படுவதிலோ அன்றேல் பாடசாலைக்களுக்கிடையிலான இணைந்த வேலைத்திட்டங்களை சில சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

1. V பிள்ளைகளின் ஆர்வ மிகுதியை ஆசிரியர்கள் விதந்துரை செய்தபோதும் அவர்களின் தமிழ் மொழிக் கல்வியிலுள்ள கரிசனையை வளர்த்தெடுப்பதிலுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிக்கல்களை மேற்கண்டவாறு முறையீடு செய்திருந்தும், இவற்றிற்கான அமைப்பு வடிவங்கள், பொது வேலைத் திட்டங்களற்ற நிலையினை தீர்த்து வைப்பது, டென்மார்க்கில் இயங்கி வரும் பொது ஸ்தாபனங்களின் கடமையாகின்றது.

## 2. வகுப்பறை வசதியீனங்கள்.

a. நூல்களின் பற்றாக்குறை.
b. துணைக் கருவிகளின் பற்றாக்குறை.
c. வகுப்பு நடைபெறும் நாட்களும்/நேரங்களும்.
(விடுமுறை நாளாகவோ அன்றேல் பிள்ளைகள் சோர்வடையக் கூடிய நேரமாகவோ அமைந்திருக்கின்றது).

குறிப்பாக இத்தகைய பிரச்சனைகள் அன்றேல் வசதியீனங்களினால் மொழிக் கல்வியினை புகட்டுவதில் மிகப் பெரிய பலாபலனை மாணவர்கள் பெறமுடியாதுள்ளது. இதனைப் பல ஆசிரியர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஒரு நிலைப்பட்டு இப்பிரச்சனையை கவனம் கொள்வோமேயானால் 1. ஆசிரியர்கள் பயிற்சி 2. பொதுவான பாடத்திட்டம் 3. பொதுவான பாடநூல்கள் அமைக்கப்படுவதன் அவசியத்தை புரிந்துகொள்ள முடிகின்றது. இம் மூவகையான தீர்வும் இதற்கப்பாலுள்ள வகுப்பறை வசதியீனங்கள் தீர்க்கப்படுவதுமே, ஓர் நேர்த்தியான பாடசாலை இயக்கத்திற்கும், அதன் சிறந்த பெறுபேறுகளுக்கும் வாய்ப்பாக அமையலாம்.

நன்றி.





வெளிவந்துவிட்டது.

'கதிரேசனின் சிறுவர் பாடல்கள்'

ஈழத்தில் நீண்ட காலம் கற்பிப்பதில் தன்னை ஈடுபடுத்தித் தமிழ்ப் புலமைமிக்க பல மாணவர்களை உருவாக்கிய திரு.செ.கதிரேசர்பிள்ளையின் இலகுதமிழ், அழகுநடையில் முப்பது வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ்ப் பொக்கிஷம்.

சிறுவர்களைக் கவரும் விதத்தில் அழகிய வடிவமைப்புடன் வெளிவந்துள்ளது. தொகையாகப் பெற்றுக்கொள்ளவோ தனிப்பிரதிகளைப் பெறவோ தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

C.Adhavan,/Priorens gade 32, 1th,/5600 Faaborg,/Denmark.

* பிரதி ஒன்றின் விலை முப்பது குறோனர்கள் மாத்திரமே *




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாடத்திட்டப்பிரேரணை

டென்மார்க்கில் வசிக்கும் சகல தமிழ்ப் பெற்றோருக்கும், மக்களுக்கும்.

அன்புடையீர்!

தற்பொழுது இங்கு தமிழ்மொழியைக் கற்று வரும் எமது மாணவர்களுக்கு இதுவரை ஒழுங்கு படுத்தப்பட்ட பாடப்புத்தகங்கள் இல்லாதிருக்கும் குறைபாடு அனைவரும் அறிந்ததே.

இக் குறைபாட்டைத் தீர்க்குமுகமாக டென்மார்க்கின் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் வழிகாட்டலுடன் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இதுவரை மூன்று பயிற்சிக்கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக்கருத்தரங்கை வெற்றிகரமாக ஒழுங்கு செய்து, நிறைவேற்றிய பெருமை "டெனிஷ் — தமிழ் தோழமை ஒன்றியங்களின்" ஒருங்கிணைப்புக்குச் சேரும் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

மேற்கூறப்பட்ட கருத்தரங்கில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்கான வேலைகளில் முதற்கட்டமாக ஓர் பாடத்திட்டத்தை வகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஆகவே பாடப் புத்தகங்களை அமைப்பதற்கு வேண்டிய அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய ஒரு மாதிரிப்பாடத்திட்டத்தை இங்கு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து தயாரித்துள்ளனர். இது நிறைவேற்றப்பட்ட ஒரு பாடதிட்டமல்ல. எனவே பின்வரும் மாதிரிப்பாடத்திட்டத்தை வாசித்தபின்னர், இது பற்றிய உங்கள் கருத்துகளையும், ஆலோசனைகளையும் உங்கள் பகுதியில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் அல்லது டெனிஷ் — தமிழ் தோழமை ஒன்றியம், postboks: 313, 7400 Herning என்ற முகவரிக்கு 15-09-93 ற்கு பிந்தாமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்பாடத்திட்டம் தொடர்பாக, விமர்சனக் கூட்டம் ஒன்று, எதிர்வரும் *16 — 10 — 93* (சனிக்கிழமை) SID, Vestergade 27, 7400 Herning ல் இடம்பெறும். இதில் பங்குபற்றுபவர்களுக்கு எந்த விதமான செலவுகளும் கொடுக்கப்படமாட்டாது.

*டெ. த. தோ. ஒ. ஒருங்கிணைப்பின் சார்பில்*
*து. செல்வக்குமார்.*

# புலம்பெயர்ந்தநாடுகளில் தாய்மொழிக்கல்விக்கான(தமிழ்) கல்விக்கொள்கையும் — பாடத்திட்டமும்.


புலம்பெயர்ந்த நாடுகளில் தாய்மொழி அறிவை விருத்திசெய்யுமுகமாக அவ்வவ் நாடுகளில் ஈழத்தமிழ் மாணவர்களுக்கென பல பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இவ்வாறே டென்மார்க்கிலும் தமிழ்மொழிப் போதனை நடாத்தப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் முற்றிலும் புதியசூழல் ஒன்றில் தன் தாய்மொழியைப் பயின்று வரும் தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை மையப்படுத்தி அம் மாணவர்களின் தாய்மொழிக்கல்வி ஒன்றின் தேவையினூடாக அம்மாணவர்கள் இடையே ஏற்படுத்த விரும்பும் கல்வி இலக்கினை வரையறை செய்து கொள்வதே இக்கல்விக் கொள்கை எனலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






இக்கல்விக்கொள்கையினை முற்று முழுதாக விபரித்தல் என்பது இயலாது விடினும் டென்மார்க்வாழ் தமிழ் மாணவர்களது பெற்றோர்களுக்கும், இத்துறைசார் நலன் விரும்பிகளுக்கும் ஒரு மைய விளக்கத்தை இக்கல்விக் கொள்கை விளக்க விரும்புகின்றது.

எனவே, டென்மார்க்கில் தாய்மொழிப் போதனையில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மை ஆசிரியர்களின் ஒப்புதலோடு திட்டமிடப் பட்ட ஒரு வரையறைக்குட்படுத்தப்பட்ட பாடத்திட்டம் ஒன்றின் சுருக்க விளக்கக் குறிப்பீடாகவே இக்கல்விக்கொள்கையை நாம் பார்த்தல் வேண்டும்.

சுருங்கச் சொல்லின்; புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மாணவர்களினதும், அவர்தம் பரம்பரையினதும் தாய் மொழிக்கல்வித் தேவையின் முக்கியத்துவத்தையும், தாய் மொழிக்கல்வி நிகழும் புதிய சூழலை நிதர்சனப் படுத்தும் தேவையும், பிரித்தானியர்களின் வசதிக்காக ஏற்படுத்தப் பட்ட இலங்கைத்தமிழ் மொழிப்பாடத்திட்ட வரைபுகளையும் மீறி இன்றைய/ எதிர்கால தமிழ்ச் சந்ததிகளின் தேவைகளை முன்னிறுத்தியே இக் கல்விக் கொள்கையும் — பாடத்திட்டமும் வரையப் பட்டிருக்கிறது. இனி — கல்விக் கொள்கையின் பிரதான அம்சங்களை விளக்க முயல்வோம்.

புலம் பெயர்ந்தவர்களும் அவர்தம் பரம்பரையுமான தமிழ் மாணவர்களுக்கு அவர்களின் தாய்மொழிக் கல்வி ஒன்றினூடாக, **எழுத்துகளை உச்சரிக்க, வாசிக்க, வாசித்தவற்றை புரிந்து கொள்ளவும், தனது சிந்தனையை சுயமாக எழுதக்கூடிய இலக்கணப்பின்னணி யுடனான உலகளாவிய பல்லியற்துறை சார்ந்து தமிழ்மொழியாற்றலை விருத்தி செய்தல்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவர்களது பிறப்புரிமை அடையாளங்கள் அழிந்துவிடாது பாதுகாத்தல், அதனை விருத்தி செய்தலும்; உலக அரங்கில் அம்மாணவர்கள் தனது தேசிய இன அடையாளங்களின் — சாரலை அடையாளப் படுத்திக் கொள்ளலும்; ஆகிய முக்கிய மையங்களை மாணவர்கள் இனங்கண்டு கொள்ளும்படியாக இக்கல்விக் கொள்கை தன்பாடநூல்களின் உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கும். இவ்மையக் கொள்கையைச் சுற்றியே பாடநூல்களின் விரிவும், அதன்வழி மாணவ மொழித் திறமைக்கேற்ப, ஏற்படுத்தப்படும் மொழிச் செறிவும் கொண்டதாக பாட உள்ளடக்கங்கள் பேணப்படும்.

தான் வாழும் நாட்டில் நடைமுறையிலுள்ள அந்நாட்டுக் கற்கை முறைகள்; அன்றேல் போதனாமுறைகளுக்கு சமாந்தரமாகவோ அன்றேல் அதனுடனான தொடர்ச்சி ஒன்றினைப் பேணுவதாகவோ தான் இக் கல்விக்கொள்கை "நடைமுறை அனுசரணை" அமையவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றுண்டு.

ஆக புதியசூழலும் — அதன் அனுபவங்களை அனுசரணை கொள்வது ஊடாக "மாணவர்களை வென்றெடுத்தல்" எனும் பெரும்பணியை நிறைவு செய்வதற்கு இக்கல்விக் கொள்கையின் "நடைமுறை அனுசரணை" இடம் தருகின்றது.

நான், எனது குடும்பம், சூழல், சமூகம், வாழும் நாடு, தாய்நாடு, சர்வதேசியம், இவையோடினைந்த அனுபவரீதிலான விடையங்களை உள்ளடக்கியதாக விரிவடையும் இக்கல்விக்கொள்கையும் — பாடத்திட்டமானது மனிதவாழ்வும், அது சார்ந்த சகலதுறைசார் அறிவினையும் சார்ந்து; இக்கல்விக்கொள்கையானது கட்டமைப்பு பெற்றிருக்கின்றது. அதாவது பிறமொழி இலக்கணங்களுடன் தமிழையும் /தமிழ்மொழி இலக்கணப் பின்னணியுடன் பிறமொழி அறிவினையும் பெறுவதற்கான ஒரு சமாந்தர வளர்ச்சிக்கான "இலகுதமிழ்" முறையாகவோ, அன்றேல் அதன் அடிசார்ந்து உயர்நிலை மட்டம் வரை தாய்மொழியை விருத்திசெய்து கொள்ளும் படியாக மாணவர்களுக்கு அடிப்படை அம்சங்கள் ஊட்டிவிடுதல் எனும் பெரும் கவனத்தையும் இக்கல்விக்கொள்கை கொண்டிருக்கின்றது.

**பாடத்திட்டப்பிரேரணை தொடர்பான விமர்சனக்கூட்டம்.**

**16.10.1993 சனிக்கிழமை**

காலை 9.30 மணி

**இடம்:**

**SID**
**Vestergade 27**
**7400 Herning**

20ம் பக்கத் தொடர்ச்சி...

மாமனாரின் ஸ்டீக்கரை போட்ட பின்பு நான் பிள்ளைகளை நெருங்கினேன். அவர்களின் முகம் களைத்திருந்தது.

"என்ன செய்கிறியள்?"

"மாமா இந்தை தானே தொலைஞ்சு போனவர். தேடிப் பார்க்கிறோம் காணவில்லை. அம்மப்பாவும் தொலையப்போறார்!"

பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு நான் வெளியில் வந்துவிட்டேன்.

பின் மனைவி தனியே வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

பதவிளக்கம்: HVID HÅR – வெள்ளைமயிர்.
SORT HÅR – கறுப்பு மயிர்.

www.tamilarangam.net

# போதும் போதும்

குறிஞ்சி, முல்லை, மருதம்,
நெய்தல், பாலை...
— ஐவகை நிலங்களும் அடையாளம் மாறின
குடுமி, பூணூல், தர்ப்பை, பஞ்சகச்சம்...
— நால்வகை வருணங்களே இங்கு
நாட்டாண்மை.


அப்பாவி தமிழர்களே
ஆசைதீர படித்துக்கொள்ளுங்கள்
வரலாற்றில் சிந்துசமவெளி நாகரிகம்
அன்றாட வாழ்க்கையிலோ
அவமானப்படுத்தும்
'சிண்டு சமவெளி' நாகரிகம்

விண்ணைமுட்டும் கோபுரங்களை
வேடிக்கை பார்த்துக்கொள்
மண்ணைக் கவ்வும் வாழ்க்கை பற்றி
மதங்களுக்குக் கவலை இல்லை..

ஓமகுண்டங்களின் புகை மூட்டத்தில்
உன் முன்னோர்களின் ஆவியைத் தேடி
நீயும் மூர்ச்சையாகு...

சராசரி இந்துவே
சமாதிநிலையில் உனக்கு
சகலமும் விளங்கும்.
போதும், போதும்...

திருநீறில் புதைந்த புறநானூறே
சுப்ரபாதம் கேட்காமல் நீ
காலைக் கடன்களைக்கூட கழிப்பதில்லை
ஆயினும் உனக்கும் ஏன் சூத்திரப்பட்டம்?



www.tamilarangam.net

'சூத்திர பேராசிரியரே'
'சூத்திர மருத்துவரே'
'சூத்திர நீதிபதியே'
எங்கு வாங்கிய பட்டமிது
திருப்பிக் கொடுக்கவும் உரிமையில்லாத
இத் தீண்டாமைப் பட்டத்தின்
விந்தையறிவீரோ?!!

'வேசிமகனே'....!
நம் தேசியப்பெருமை
ஏற்றுக்கொள்வோமா?

இளைஞர்களே நீங்கள்
இருபத்தியோறாம் நூற்றாண்டை நோக்கி
பீடு நடை போடலாம்.
ஆனால் அது
பிராமண நடையில் குறுக்கிட்டால்
பிரிவினைவாத தடைச்சட்டம், எச்சரிக்கை.
விஞ்ஞான வீரர்களே விண்ணப்பம் ஒன்று
ஏவுகணைகளை வானத்தில் விடுவீர்கள்
நீர்மூழ்கிக் கப்பலை கடலுக்குள் விடுவீர்கள்
ஒரு சூத்திரனை
கோயில் கருவறைக்குள் விட முடியுமா?

அடுத்தவன் முதுகில் ஏறுவதே
அறிவியல் ஆன நாட்டில்
புவியீர்ப்பு விசைகூட
பொதுவாய் இருக்குமா?

— துரைசண்முகம் —



நன்றி: புதியகலாச்சாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?

## தங்கரூபன்

..... மிகவும் கிண்டலுடன் அன்டன் கராட்ஸ் என்பவர் எழுதிய CAFE SOCIETY என்ற சிறுகதையில் வரும் பகுதிகள்

● சொர்னாங்கோவின் (முன்னாள் ரஷ்ய அதிபர்) வயதான அன்னை கடைசியில் தன் மகனைப் பார்க்க மாஸ்கோவுக்கு வந்த போது என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா?

அவர் ரயிலிலிருந்து இறங்கியதுமே ஒரு பெரும் கறுப்பு நிற வோல்வோவில் வைத்து அதிபர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப் பட்டார். அந்த மூதாட்டிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எப்படி மகனே உனக்கு இவ்வளவு பெரிய கார் கிடைத்தது? இது நீ திருடியது அல்லவே?"

"இல்லை அன்னையே, என் உத்தியோக நிமித்தமாகக் கிடைத்தது தான் இந்தக் கார். நான் ஒரு பெரிய உத்தியோகத்தில் இருக்கிறேன்."

மூதாட்டி அதிபர் மாளிகையைச் சுற்றிப் பார்த்தார். அதன் படாடோபத்தையும், வெளிநாட்டுத் துணிவகைகளாலேயே நிறைந்திருந்த அலுமாரிகளையும் பார்த்து வியந்தார்.

"இதுவும் என் உத்தியோக சம்பந்தமானது தான், இவ்வளவு பெரிய உத்தியோகத்திலிருந்தால் அதற்கேற்றபடி உடுத்திக் கொள்ள வேண்டாமா, அது தான் தாயே"

மூதாட்டிக்குப் புரிந்தது. ஆனாலும் அவருக்கு இதெல்லாம் ஒரு மாதிரியாகவே இருந்தது. அன்று இரவு டின்னரில், வைனும், வேறு ஏராளமான வெளிநாட்டு மதுவகைகளும் பரிமாறப் பட்டன. க்ரெம்ளின் மாளிகையின் பின் புறத்திலிருந்த ஒரு பெரும் அறை இம் மது வகைகள் வைக்கப்படுவதற்கென்றே ஒதுக்கப்பட்டிருந்தது. இத்தனை ஆடம்பரமான வாழ்க்கையைப் பற்றி மூதாட்டி தன் மகனைக் கேட்டார். அதே பதில் தான் கிடைத்தது. இதெல்லாம் என் உத்தியோகம் சம்பந்தப்பட்டது.

அப்போது அந்த மூதாட்டி உண்மையிலேயே கவலைப்பட ஆரம்பித்தார்.

"இதெல்லாம் சரியென்று எனக்குத் தோன்றவில்லை மகனே,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீ இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு வேளை கம்யூனிஸ்ட்டுகள் திரும்பவும் வந்துவிட்டால் நீ என்ன செய்வாய்?"

இது சிறுகதையில் வரும் பகுதி என்றாலும் ரஷ்ய ஆட்சியாளரின் அதிகார துஷ்பிரயோகத்தை அம்பலப்படுத்துகிறது. திரிபுவாதிகளின் 'குருநாதன்' குருசேவ்வின் ஆட்சியில் நடந்த சிறு சம்பவம் ஒன்று.

1956ல் 20வது காங்கிரஸ் கூடிய போது பல புதியவர்கள் கட்சிக்குள் சேர்க்கப்பட்டார்கள். அவர்களில், கட்சியின் தலைமையில் A.I. அஜுபெய் (A.I. ADZJUBEI) என்பவர் முக்கிய பாத்திரம் வகித்தார். இவர் கட்சிக்குள் 1954ல் நுழைந்து, இரண்டு வருடங்களின் பின் மத்திய கமிட்டிக்கான தெரிவுக்கு வேட்பாளராகவும், அரச பத்திரிகையான இஸ்வெஸ்தியா (IZVESTIA)வின் பதிப்பாசிரியராகவும் தெரிவு செய்யப்பட்டார். 1961 நடைபெற்ற காங்கிரஸில் அவர் மத்திய கமிட்டியின் முழு அங்கத்தவராக்கப்பட்டார்.

இவ்விதம் ஓர் மின்னல் வேகத்தில் ஒருவருக்கு பதவிகள் எப்படிக் கிடைத்தன?

வேறு எந்தக் காரணங்களுமில்லை. அவர் கோமாளி குருசேவின் மருமகன் என்பதால் தான்! குருசேவின் சீடர்களான பிரஸ்னேவ், குருசேவ்வை ஆட்சியிலிருந்து (1964) விரட்டியதும் இந்த மருமகனும் அரசியல் அரங்கிலிருந்து மறைந்துபோனார். (வந்த வேகத்தில்)

1953ல் தோழர் ஸ்டாலினின் மரணத்தை தொடர்ந்து கட்சியையும், அரசையும் சதி மூலம் கைப்பற்றிய திரிபுவாதிகள் (குருசேவ் - பிரஸ்னேவ் கும்பல்) 1956ல் நடைபெற்ற 20வது காங்கிரஸில் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் ஓரங்கட்டியமைத்தைக் காட்டும் அட்டவணை.

1918–1939

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்களும் வர்க்கத்தொகுப்பும் 1918–39

Tabel 1:

| காங்கிரஸ் | வருடம். | அங்கத்தவர். | தொழிலாளர். | விவசாயிகள். | அறிவுஜீவிகள். |
|---|---|---|---|---|---|
| 7 | 1918 | 270.000 | 56,9 | 14,5 | 28,6 |
| 8 | 1919 | 313.000 | 47,8 | 21,8 | 30,4 |
| 9 | 1920 | 612.000 | 43,8 | 25,1 | 31,1 |
| 10 | 1921 | 732.000 | 41,0 | 28,2 | 30,8 |
| 11 | 1922 | 532.000 | 44,4 | 26,7 | 28,9 |
| 12 | 1923 | 485.000 | 44,9 | 25,7 | 29,4 |
| 13 | 1924 | 680.000 | 55,4 | 23,0 | 21,6 |
| 14 | 1925 | 911.000 | 58,4 | 23,8 | 17,6 |
| 15 | 1927 | 1.025.000 | 56,3 | 22,3 | 21,4 |
| 16 | 1930 | 1.270.000 | 65,3 | 20,2 | 14,5 |
| 17 | 1934 | 1.874.000 | 64,5 | 27,8 | 7,7 |
| 18 | 1939 | 1.588.000 | – | – | – |

1932 – 1952 ற்கான தொகுப்பு பெறமுடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Tabel 3:**

| காங்கிரஸ் | வருடம் | தொழிலாளர் | விவசாயிகள் | அறிவுஜீவிகள் |
|---|---|---|---|---|
| 13 | 1924 | 63,2 | 5,4 | 31,4 |
| 15 | 1927 | 71,0 | 5,7 | 23,3 |
| 16 | 1930 | 71,2 | 6,7 | 22,1 |
| 17 | 1934 | 60,0 | 8,0 | 32,0 |
| * 20 | * 1956 | * 18,5 | * 13,8 | * 67,7 |

லெனின், ஸ்டாலின் தலைமை தாங்கிய சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி (பாட்டாளிவர்க்கக்கட்சி), திரிபுவாதிகளால் சீரழிக்கப்பட்டு "முழு மக்களின் கட்சி" என அழைக்கப்பட்டதை அட்டவணை மிகவும் தெளிவாக காட்டுகின்றது. * என்ற இக்குறி திரிபுவாதிகளின் காலத்தில் கட்சியின் வர்க்கத் தொகுப்பை காட்டுகின்றது. இதைப் பார்த்தால் எளிதில் இது கம்யூனிஸ்ட் கட்சியல்ல "அதிகாரவர்க்க முதலாளிய கட்சி" என்பது தெரியும். 1956ற்குப்பின் ரஷ்ய திரிபுவாதிகள் உலகெங்கும் செய்த துரோகங்களை பார்த்தோம். இன்று வரையும் இவர்களையே 'கம்யூனிஸ்டுக்கள்' என அவர்களின் ஆதரவாளர்கள் கூறிவந்தனர். 1990ற்குப்பின் இவர்களால் வாய் திறக்க முடியவில்லை.

உலக அரங்கில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பிளவுண்டு போன காலகட்டங்கள் மிகவும் அரசியல் கொந்தளிப்பானவை. சர்வதேச ரீதியில் திரிபுவாதத்திற்கு எதிரான போர்க்குரலை சீனாவும், அல்பேனியாவும் எழுப்பின. இச் சந்தர்ப்பத்தில் பிடல் காஸ்ரோ தலைமையிலான கியூபா ஆட்சியாளர்கள் எவ்வித விமர்சனமுமின்றி திரிபுவாத ரஷ்யாவை சார்ந்து நின்றது. உலகெங்கும் அமெரிக்காவுடனான ரஷ்யாவின் ஆதிக்கப்போட்டிக்கு, ஆதிக்க வெறிக்குத் துணை போனது. அமெரிக்காவுக்கு எதிராக யார் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்களோ அவர்கள் யாருடனும் கைகோர்க்கத் தயாரானவர்கள், எதிர்ப்பவர்கள் எப்படிப் பட்ட கயவர்கள், கிரிமினல்கள் என்றாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள். உதாரணமாக மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் காட்டுமிராண்டி ஆட்சிநடாத்திய ராணுவசர்வாதிகாரி நோரேகா அமெரிக்காவுடன் ஏற்பட்ட தகராறின் போது அமெரிக்காவுக்கு எதிரான யுத்தம் மேற்கொண்டான். கியூபா ஆட்சியாளர்கள் அவனை ஒரு தேசபக்தன் என வர்ணித்தனர். நோரேகா உண்மையில் ஓர் சர்வதேசக் கிரிமினல். போதை மருந்து கடத்தும், ஆயுதங்கள் விற்கும் ஓர் மாஃபியா கும்பலின் தலைவன். அமெரிக்க நாசப்படையான CIA யின் ஏஜண்டாக இருந்தவன். கியூபா ஆட்சியாளர்களுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீதுள்ள வெறுப்பு நோரேகா போன்றோரை ஆதரிப்பதால் தீர்ந்து விடுமா? இல்லை. கியூபா தலைவர் பிடல் காஸ்ரோ ஓர் கம்யூனிஸ்ட் என்று பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் அவரோ கியூபாவின் 14 மாகாணங்களில் தனக்கென ஆடம்பர, உல்லாச வசதிகளையும்,

www.tamilarangam.net

விலையுயர்ந்த உல்லாசப்படகுகளையும் வைத்திருப்பதாக செய்திகள் வெளிவந்தன. இவை ஒரு கம்யூனிஸ்டிற்கான குணாம்சங்களல்ல.

மறைந்த போராளி சேகுவாரா கியூபா புரட்சியைத் தொடர்ந்து ஏனைய லத்தின் அமெரிக்க நாடுகளிலும் அதே மாதிரிப் புரட்சி நடாத்த வேண்டும் அதற்கு கியூபா, திரிபுவாத ரஷ்யா உதவும் என்றும் சிந்தித்தார். அவரது வாழ்க்கை பொலிவியாக்காட்டில் முடிவுற்றது. மக்களின் ஆதரவின்மையாலும், கியூபா, ரஷ்யாவின் உதவிகளில்லாமையாலும் அவரது உயிரை CIA பலிகொண்டது. சே'யின் மரணத்தைக் காட்டி கியூபாவும், ரஷ்யாவும் ஆதாயமடைந்தன. இவர் பரந்துபட்ட மக்கள் போராட்டத்தில் பங்கு பெறுவதற்கு [illegible] கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா போன்ற போலிக்கம்யூனிஸ நாடுகளின் வீழ்ச்சியால் கியூபா பொருளாதாரசிக்கலில் மாட்டியுள்ளது. அமெரிக்காவின் அநீதியான பொருளாதாரத்தடையும் இதற்கு முக்கிய காரணமாகும். கியூபாவின் சுயாதிபத்தியத்தை ஏற்றுக்கொள்ளாத அமெரிக்க காடையர்கள் 35 வருடங்களாக இந்த அநீதியை செய்து வருகின்றனர். கியூபாவின் சுயாபத்தியத்திற்கான போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். இப்பொருளாதாரத்தாக்கத்தால் நின்றுபிடிக்க முடியாத கியூபா தனியார் துறையையும், சுற்றுலாத் துறையையும் அங்கீகரித்துள்ளது. இதற்கு தங்கள் காலிலேயே நிற்காமல் போலிகளை நம்பியமையே காரணம்.

மார்சல் டிட்டோ வின் யூகோஸ்லாவியாவில் ஏற்பட்டுள்ள இனக்கலவரம் பல ஆயிரம் உயிர்களை பலிகொண்டிருக்கிறது. இதுவரை காலமும் மேற்கத்திய முதலாளித்துவ பிற்போக்காளர்களால் "மனித முகம் கொண்ட கம்யூனிச நாடு" போற்றிப் புகழப்பட்ட யூகோஸ்லாவியா இனக்கலவரத்தால் சின்னாபின்னமாகியுள்ளது. யார் இந்த டிட்டோ? இரண்டாம் உலகப்போரின் போது நாஜிகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் சோவியத்யூனியனின் உதவியுடன் வெற்றி பெற்று நாஜிகளிடமிருந்து விடுதலை பெற்று தற்கால யூகோஸ்லாவியாவை உருவாக்கியவர். பின் ஸ்டாலினை அவதூறு செய்து, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முதன் முதலாக உலக வங்கியில் (IMF) யூகோஸ்லாவியாவை சேர்த்துக் கொண்டு மூன்றாம் உலக நாடுகளை முதலாளித்துவத்திற்கு எதிராக செயற்பட விடாமல் (சோசலிச முகாம்களில் இணைவதைத் தடுக்க அணிசேரா கொள்கையை (அணிசேரா நாடுகள்) உருவாக்க முன் நின்றவர். திரிபுவாதிகளான குருசேவ் - பிரஷ்னேவ் கும்பலுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். அதனாலேயே அமெரிக்க, மேற்கு நாடுகள் அவரை புகழ்ந்தனர். 'ரஷ்யாவைவிட வளர்ச்சியடைந்த நாடு', 'நாகரீக நாடு' என்றெல்லாம் மேற்கு நாடுகளால் புகழப்பட்ட நாடு (போலிக்கம்யூனிஸ்டுகளால் ஆளப்பட்ட நாடு) இன்று "காட்டுமிராண்டி

www.tamilarangam.net

களின் நாடு" என்று கூறுமளவுக்கு கொலைகளும், மக்கள் அகதிகளாக்கப்படுவதும் அதிகரித்து வருகிறது. இவ் வினைக்கலவரங்களிற்கு திரிபுவாத மட்டோ கும்பல் தான் காரணம்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் முதலாளித்துவத்திற்கு சேவை செய்துள்ளமையைப் பார்த்தோம். ஏனெனில் போலிகள் நடாத்திய ஆக்கிரமிப்புகள், உரிமை பறிப்புகள் யாவும் 'கம்யூனிசம்' என்ற பெயரிலேயே நடைபெற்றதால் கம்யூனிசம் என்றாலே மக்கள் அருவருக்கும்படி செய்யப்பட்டது. இப்போலிகளின் தவறுகளை அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் விடாப்பிடியான, கடுமையான பிரச்சாரங்களை உலகெங்கும் செய்ததும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட வீழ்ச்சிகளும், கம்யூனிசமே தவறானது என்ற ஒரு மாயையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தாம் தான் உலகின் ஜனநாயக நாடுகள் என்றும், தங்களைப் பின்பற்றுவதே சிறந்தது என்றும் கடும் பிரச்சாரங்கள் சகல தளங்களிலும் பாரியளவு நடைபெறுகிறது. ஆனால் உண்மையோ முதலாளித்துவ வாதிகளின் முகத்தில் அறைவதாகவே உள்ளது.

— தொடரும் —

# சால்மன் ருஷ்டியின் காதல் வரிகள் சில....

எனக்குக் கோப்பி பிடிக்கும்
எனக்குத் தேனீர் பிடிக்கும்
எனக்கு ஐஸ்கிறீம் பிடிக்கும். ஆனால்
நீ அருகிலிருக்க வேண்டும்.

எனக்கு 'பட்டுசில்' விருப்பம்
எனக்கு 'சீசில்' விருப்பம் - சொன்னால்
உன்னில் நான் கூட விருப்பம்.

ரோஜா பூக்கள் சிவப்பு
நீலோற்பல பூக்கள் நீலம் - ஆனால்
நீ
உன்னைப் போல் இனிப்பில்லை.

-நன்றி-
"சாத்தானின் பாடல்கள்"
தமிழில் க. ஆதவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முரளி

# நேற்றும் இன்றும் இவர்க்கு...

விடிந்து கனநேரமாகிவிட்டது, ஆனாலும் படுக்கையை விட்டு எழமுடியவில்லை. மனமும் இல்லை. வெளியில் பெய்யும் மழைக்கும், இந்தக் குளிருக்கும் போர்த்துக் கொண்டு படுக்க... இருக்கிற சுகம் சொல்ல முடியாது. இந்த ஐரோப்பிய இயந்திர கதி வாழ்க்கையில் வருகின்ற ஒவ்வொரு சனிக்கிழமையும், அந்த நாளிலே கொள்ளும் நீண்ட நித்திரையுமே வேலை செய்யும் ஒருவருக்குத் திருப்திகரமானதும் சந்தோசமானதும். நித்திரை கொள்ளாவிட்டாலும், படுக்கையில் முழித்துக் கொண்டு கிடப்பதும் ஆனந்தமே.

வெளியிலே யாரோ உள்வாயில் கதவைத் திறக்கும் சத்தத்தோடு மழையின் இரைச்சலும் பெரிதாய்க் கேட்கிறது. கதவு போய்த் தானாம் அடிபட்டுக் கொள்கிறது.

யார் இந்த நேரம்..?

தபாந்காரனோ!!.. ஊகம் செய்வதற்குள் எனது வீட்டுக்கதவின் ஓட்டையினூடாக கடிதங்கள் சில தட தடவென்று விழுந்தது. கதவு ஓட்டையிலிருந்த அலுமினியத் தகடு அதிர்ந்து கொண்டிருந்தது.

இப்ப யார் போய்க் கடிதம் எடுப்பது?

என்னால் எழும்பவே முடியாது. போர்வையைக் கழப்ப மனமில்லை. நான் மனுசியைப் பார்க்க, மனுசி என்னைப் பார்த்துச் சிரித்தாள். அவளுக்கும் படுக்கையை விட்டு எழும்ப விருப்பமில்லை

www.tamilarangam.net

"இண்டைக்குச் சனிக்கிழமை எப்படியும் ஊர்க்கடிதங்கள் வரும் உன்ரை கொம்மாவின் கடிதம் கட்டாயம் வந்திருக்கும். போய் நீதான் எடு நான் எடுக்க மாட்டேன்" எனக் கூறிவிட்டு அந்தப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டேன். ஒன்றுமே பேசாமல் படுத்தவள், ஏதோ நினைத்தவள் எழுந்து போனாள். கண்களை மூடிக் கொண்டு நித்திரை கொள்ள முனைந்தேன்.

ஒரு கொஞ்ச நேரம் ஆகவில்லை விக்கி.... விக்கி அழும் சத்தம் கேட்கிறது. என்ன நான் காண்பது கனவா?... அல்லது நிஜமா? அழும் சத்தம் பக்கத்தில் தான் கேட்கிறது. நிஜம் தான் மனைவி தான் அழுது கொண்டிருக்கிறாள். போர்வையை நிமிர்த்தி கண்களைத் திறந்து அவளை நிமிர்ந்து பார்க்கின்றேன்.

படுக்கைக்கு பக்கத்திலுள்ள கதிரையில் இருக்கிறாள். கையில் ஒரு இலங்கைக் கடிதம். ஊரில் இருந்து துக்கச் செய்தியை அது தாங்கி வந்திருக்க வேண்டும். என்ன கொதாரியோ யாருக்கு என்ன நடந்ததோ என மனதுக்குள் நினைத்துக் கொண்டு...

"என்னப்பா.... ஏன் அழுகிறாய். யார் போட்டிருக்கினம்.... என்னண்டாலும் சொல்லிப் போட்டு அழு" என்றேன். ஒன்றுமே செவிமடுக்காதவள் போல் விக்கி... விக்கி அழுதாள். என்னப்பா.......... இஞ்சாலை அந்தக் கடிதத்தைத்.... தா. எனக்கும் உடலெல்லாம் உள்ளுக்குள் நடுங்கியது. இந்தக் குளிருக்குள்ளும் என்னுடல் வியர்க்கத் தொடங்கியது.

"ஐயோ!.... நான் என்னத்தையப்பா சொல்ல..... இந்த... அநியாயத்தை யாரிட்டை போய் முறையிடுறது.... எங்கடை சுதன் செத்துப் போனானாம்..... அவனைச் சுட்டுப் போட்டாங்களாம்.... அதுவும் பெரியம்மாவின் மகன் சந்திரன் தானாம் சுட்டது". விக்கி விக்கி வார்த்தைகள் துண்டு துண்டாய் வெளியில் வந்து வீழ்ந்தது.

சுதன் செத்துப் போனான்.

சாகடிக்கப்பட்டான்.

மனைவியின் சின்னம்மாவின் மூத்தமகன்.

மூன்று பெண்சகோதரிகளின் தமையன். இதற்கு என்னால் ஒன்றுமே சமாதானம் சொல்ல முடியாது. ஒன்றுமே பேசாது போர்வையைத் தூக்கிப் பக்கத்தில் போட்டுவிட்டு கால்களை மடக்கி கைகளால் கால்களை அணைத்துக்கொண்டு அமர்ந்திருந்தேன்.

வெளியிலே மழை பெய்து கொண்டிருந்தது. எனது பழைய சிந்தனைகள் நுரைத்து நுரைத்து மூளையிலிருந்து வழிந்தது....... ஏறக்குறைய ஒரு பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இப்படித்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மழை பெய்து ஓய்ந்த நேரம், வெயில் லேசாக எறிக்கத் தொடங்கியது. தெருவெல்லாம் வாரடிச்சு குருத்து மணல் வெள்ளையாய் சுத்தமாய் அழகாயிருந்தது. பூவரசும் செழிச்சு நிமிர்ந்து நின்றது. வெள்ளத்தால் அடித்துவரப்பட்ட குப்பை கூழங்கள், நுரைகள் எல்லாம் வேலியோரம் ஒதுங்கியிருந்தது. ஆங்காங்கே சிறு சின்ன பள்ளங்களில் வெள்ளம் நின்றது.

ஏதோ தெரியவில்லை வாசிகசாலையடியில் இன்று ஒருவரையும் காணவில்லை. வழமையாக அந்த இடத்துக்கு வரும் இளைஞர்கள் பெரியவர்கள் எவ்வோரும் எங்கே போனார்கள். ஊர்ப்பகிடிகளையும் புதினங்களையும் சொல்லிச் சிரிக்கும் ரகு அத்தானையும், சிறுவன்னாவையும், திரவியத்தையும் கூட இன்று காணவில்லை. எங்கே போயிருப்பார்கள்.

வாசிகசாலைக்குப் பக்கத்திலுள்ள கோவிலுக்காணி வளவுக்குள் சின்னப் பொடியள் மாத்திரம் ஓடி விளையாடும் சத்தம் கேட்கிறது. இவங்கள் ஒருத்தரையும் காணேல்லை, இன்று பொழுது போவது கஸ்ரம் தான் என நினைத்துக் கொண்டு வாசிகசாலைக்குள் நுழைந்தேன்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை, வாரமலர். பக்கம், பக்கமாய்த் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். வாசிப்பதில் மனம் செல்லவில்லை. வெளியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் சத்தம் மிக அருகாமையில் ஒலித்தது. வெளியே பார்க்கிறேன். ஒருவனை ஒருவன் கலைத்துக் கொண்டு நாலைந்து சிறுவர்கள் ஓடுகின்றார்கள். பின்பு நின்று பேசிப் பேசி அடிபடுகின்றார்கள். சத்தம் மிகவும் பலமாய்க் கேட்கிறது.

"என்னடா இவங்கள் இதிலை வந்து அடிபடுறாங்கள்" என நினைத்துக் கொண்டு பேப்பரும் கையுமாக வந்து வெளித்தாவார ஓட்டில் அமர்ந்து கொண்டு பேப்பர் வாசிப்பது போல் பாசாங்கு செய்துகொண்டு அவர்களையும் அவர்கள் கதைப்பதையும் கவனித்துக் கொண்டிருந்தேன்.

---

## ஆரிய இனவெறியைத்தான் கிளப்பிவிடும்.

-லெக்ஸர்-

சர்வதேசப் புகழ் வாய்ந்த டெனிஸ் விளையாட்டு வீரர் "போரிஸ் பெக்கர்" ஜேர்மானிய இனத்தைச் சேராத "பார்பரா" என்ற பெண்ணைத் திருமணம் செய்ய இருப்பது, நவ நாஜிகளிடையே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இந் நாஜிகள் "பெக்கர் நாட்டை விட்டு ஓடு" என இப்பெண்ணுக்கு எதிராக எங்கும் கூக்குரலிட்டு வருகின்றனர். இதனால் 'பெக்கர்' தன் காதலியுடன் லண்டனில் தங்கிவிட முடிவெடுத்துள்ளாராம்.

இத்துடன் 2000-ம் ஆண்டில் ஜேர்மனி நடத்த உத்தேசித்துள்ள ஒலிம்பிக் போட்டிகள் "ஆரிய இனவெறியைத் தான் கிளப்பிவிடும்" என எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"டேய் சுதன் இப்படியெண்டா நாங்கள் உன்னோடு விளையாட வரேல்லை!" நாலைந்து சிறுவர்கள் ஒருமித்தே சொன்னார்கள். எல்லோரும் சேர்ந்து மீண்டும் அதையே திரும்பித் திருப்பிச் சொன்னார்கள்...

"சுதன் நாங்கள் உன்னோடு விளையாட வரேல்லை"

சில சிறுவர்கள் ஒன்றுமே பேசாது நின்றார்கள்..........

"சுதன் நீ இப்போது செத்துப் போனாய் .... இனி எழும்பேலாது" என்றான் ஒருவன்.

"டேய் நாங்கள் உன்னை மெசின் கண்ணால் சுட்டனாங்கள் இனி எழும்பேலாது எப்படியும் உன்னை மரத்திலை தூக்கப் போகின்றோம்" என்றான் இன்னொருவன்.

சுதனுக்கு அழுவதோ விடுவதோ என்று தெரியவில்லை.....

"டேய் நீங்கள் ஒருத்தரும் என்னைச் சுடேலாது...
நான் சாகமாட்டேன்..... நான் சாகவில்லை.....
நான் ஓடுவேன்..... ஓடிக்கொண்டே இருப்பேன்.....
அப்படிச் செத்தாலும் உங்களால் சாகமாட்டேன்.."

என்று படங்களிலும், நாடகங்களிலும் வருகின்ற வசனங்கள் போல் மாறி மாறி கதைத்தான். எல்லோரையும் கவனித்துக் கொண்டு பேசாமல் பத்திரிகை பார்ப்பதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தேன். மற்றச் சிறுவர்களோ ஒத்துக் கொள்வதாக இல்லை.

"இப்படியெண்டா நான் உன்னோடு விளையாட வரேல்லை"

என ரமணன் சொல்லிக் கொண்டு திரும்ப முனைய சுதன் ரமணனைப் பிடித்து மறித்தான். "என்னடா... இது விளையாட்டு என்கிறாங்கள்... ஒருவன் செத்துப் போனான் என்கிறான், ஒருவன் சாகவில்லை என்கிறான்...... சுடுவேன்... சுட்டேன் என்கிறார்கள்... தூக்குவோம் என்கிறார்கள்." என எனக்குள் நினைத்துக் கொண்டு அவர்கள் அங்கிருந்து கலைந்துவிடுவதற்குள் என்னென்று போய் அறிந்துவிடுவோம் என நினைத்துக் கொண்டு அவர்கள் அருகில் எழுந்து போனேன்.

எங்கள் ஊர்க் குழந்தைகளில் சுதன் துடிப்பானவன், மிடுக்கானவன். தாவுவயதிலை பெரியாட்களைப் போல் சாரம் உடுத்துக் கொண்டு திரியும் அவன் அழகு தனி. மற்ற எல்லோரும் காற்சட்டையும், வெனியனும் போட்டிருந்தார்கள். சுதன் மட்டும் சாரத்தைச் சண்டிக் கட்டுக் கட்டி இறுக்கி முடிந்திருந்தான். எல்லோரது முழங்கால்களிலும், பாதங்களிலும் சேறும், மண்ணும் ஒட்டியிருந்தது. நன்றாக எல்லோரும் களைத்திருந்தார்கள் என்பதற்காக முகங்களிலும், கன்னங்களிலும் வியர்வை முத்துக்களாய் தெளித்திருந்தது. எல்லோரது கைகளிலும்,

www.tamilarangam.net

இடுப்புகளிலும் சின்னச் சின்ன துண்டுத்துண்டுகள். என்னைக் கண்டவுடன் எல்லோரும் மௌனமாய் நின்றார்கள்.

"டேய்.. என்னடா வாசிகசாலையடியிலிருந்து சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறியள்.... ஏன்ரா சண்டை பிடிக்கிறியள்" எனக் கேட்டேன்.

சுதன் தான் முந்தியடித்துக் கொண்டு பதில் சொல்லத் தொடங்கினான்.

"மாமா... மாமா நாங்கள் "இயக்க விளையாட்டு" விளையாடுகின்றோம். அதுதான்.... இவங்கள் என்னைச் சுட்டுப் போட்டோம் என்கிறாங்கள்...." என்று கவலைப்பட்டுக் கொண்டே சொன்னான்.

என்னடா இது புது விளையாட்டாயிருக்கு... நாங்கள் சின்னனாய் இருந்த காலங்களில், பொலிஸ் கள்ளன் விளையாட்டும், வேறு விளையாட்டுகளும் விளையாடுவோம் இவங்கள் என்னென்றா "இயக்க விளையாட்டு"... ஓ.... எமது அரசியல் பிரச்சினைகள் இன்று... குழந்தைகளையும் பாதித்துவிட்டதோ! என எனக்குள்ளேயே பல முறை நினைத்துக் கொண்டேன். ஏதாவது புதினங்கள் கிடைக்கும் என நினைத்துக் கொண்டு கதையைத் தொடங்கினேன்.

"டேய் விளையாடுறதுக்கு ஏன் சண்டை போட வேண்டும்"

"இவன் வேறு இயக்கம் நாங்கள் வேறு இயக்கம் அதுதான் சுட்டனாங்கள்" என்று ரமணன் முந்தியடித்துக் கொண்டு சொன்னான்.

"ஏன்ரா வேறு இயக்கம் என்றா சுட வேண்டுமே?"

எல்லோரும் ஒருவரை ஒருத்தர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். வசந்தா!... வசந்தா!! என வசந்தனின் தாய் விஜயக்கா அழைப்பது பெரிதாக கேட்கிறது.

"அம்மா குளிக்க வாக்கக் கூப்பிடுறா... நான் நாளைக்கு வாறன்" என வசந்தன் சொல்லிக்கொண்டு ஓடத் தொடங்கினான்.

நீங்களும் போய் குளிச்சிட்டு படியுங்கோ இருட்டுப் படப் போகுது ஓடுங்கோ... வாசிக சாலையடியிலை சத்தம் போடாதையுங்கோ...

www.tamilarangam.net

எனக் கூறி எல்லோரையும் அங்கிருந்து கலைத்து விட்டு மீண்டும் வாசிகசாலைக்குள் வந்து புகுந்து கொண்டேன். என்னையறியாமல் என் சிந்தனை அலைவு கடந்து பெருக்கெடுத்து ஓடியது.

மூக்கை உறிஞ்சி உறிஞ்சி இழுக்கும் சத்தம் என் பழைய நினைவுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. மறுசிலை நிமிர்ந்து பார்க்கிறேன். முகமெல்லாம் வீங்கி தடித்திருந்தது. ஒன்றுமே பேசாது எழுந்து அவள் கையிலிருந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு ஜன்னல் அருகே சென்று கேட்டீனை இழுத்துவிட்டேன். இலேசான வெளிச்சம் அறையினுள் புகுந்தது. வெளியில் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது.

அன்று விளையாட்டாக சுட்டவங்கள்,
இன்று உண்மையிலே ஒருவனுக்கொருவன்,
சுடுபட்டுவிட்டான்கள்.

எமது நாட்டில் இரு சகோதரர்கள் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொல்லும் அளவுக்கு மனிதாபிமானம் எங்கே மரணித்துப் போனது.... கண்டறியாத நாமும் அரசியலும்.... என எனக்குள்ளே நினைத்துக் கொண்டு கடிதத்தை வாசிக்கத் தொடங்கினேன்.

எழுத்துக்களைப் பார்த்தவுடனே தாரணி தான் எழுதியிருக்கிறாள் என நினைத்துக் கொண்டேன்.

அன்போடு அண்ணா! அண்ணி... தொடங்கி இடையில்....

“இதை நான் உங்களுக்கு என்னென்று எழுதுவது எப்படியும் ஒரு நாள் எழுதித்தானே ஆகவேண்டும்.... போனமாதம் வீரசிங்கண்ணா கடைச் சந்தியில் சுதனை, சந்திரனும் அவனுடைய ஆட்களும் வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். ஒரு பகல் நேரம் பலபேர் முன்னிலையில் தான் நடந்தது. இருவரும் வேறுவேறு இயக்கங்களில் இருந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும் தானே......

## குறிப்பு

23 வது இதழில் க.நா.சுப்பிரமணியத்தின் பேட்டியொன்று, அவர் பற்றிய விளக்கமின்றி வெளியிடப்பட்டிருந்தது. அந்த பேட்டி சார்பாகப் பலர் விளக்கம் கேட்டிருந்தனர்.
இவர் தென்னிந்தியாவின் விமர்சகர்களில் ஒருவரும், சிறந்த நாவலாசிரியருமாவார். இவரின் இலக்கியப்பணி பலராலும் வியந்து பாராட்டப்பட்டது. இப் பேட்டி "கார்க்கி" என்ற மார்க்சிய இதழில் (1982) வெளிவந்தது. க.நா.சுப்பிரமணியம் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டவரல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

போன மாதத்துக்கு முதல் மாதம் அவனை வந்து பிடித்துக் கொண்டு போய் விசாரித்தவங்கள்.... அன்று திரும்பக் கொண்டு வந்து சுட்டுப் போட்டாங்கள். அது இயக்க ஓடராம்.

ஏதோ மாற்று இயக்கம்... மாற்றுக் கொள்கை என்றபடியால் தான் கொண்டார்களாம் என்று சனங்கள் கதைக்குதுகள். எங்கும் ஒரே அமைதி. இவைகள் பற்றி ஒருவரோடு ஒருவர் இன்னும் கதைக்கவும் முடியாது. யார் யாரை நம்புவது என்றும் சொல்ல முடியாது... சுதனின் அம்மா அதாவது... சின்னம்மா தம்பி உயிரோடு இருக்கிறான், அவனை ஒருவரும் சுடவில்லை என்று இரவு பகலாக புலம்பிக் கொண்டிருக்கிறா... பெரியம்மா அதாவது சந்திரனின் அம்மா இதுவரையும் ஒருவரோடும் ஒன்றும் கதைக்கவில்லை.

பெரியம்மாவுக்கும், சின்னம்மாவுக்கும் தட்டிப் போட்டுது என்று சில பேர் சொல்லுகின்றார்கள்... என்னால் ஒன்றுமே சொல்லமுடியாமல் இருக்கிறது..

நீங்கள் எல்லோரும் போய் ஏதோ தப்பிவிட்டியள்...."

எனக்குத் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வழிந்தது. மூளை வலித்தது. யோசித்துப் பார்க்க தலையின் பின் பக்கம் ஏதோ குத்துவது போன்ற உணர்வு... நான் என்ன செய்ய முடியும், இல்லையேல், யாரும் தான் என்ன செய்ய முடியும்...

ஏதோ தெரியவில்லை எங்கேயோ, எப்போதோ படித்த சேரனின் கவிதை ஒன்று ஞாபகம் வந்தது. வெளிநாட்டில் இருக்கும் விமலதாசன் அண்ணாவுக்கு எழுதிய கவிதையின் சில வரிகள்.

நமது சிறுவர்கள்
கடதாசியில் துப்பாக்கி செய்து
விளையாடுகின்றார்கள்.
சமயங்களில்
நகரில் எல்லாக் கடைகளும்
பூட்டப்பட்டாலும்
சவப்பெட்டிக் கடைக்காரன்
மட்டும்
நம்பிக்கையோடு
திறந்து வைத்திருக்கின்றான்
உங்களுக்குத் தெரியுமோ!

என்னவோ
நமது அருமை நண்பர்கள்
பலரை இழந்தோம்.

தொடர்ச்சி 45ம் பக்கம்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உறக்கம் [இரக்கம்] இல்லா இரவுகள்

இன்றைய இரவுகளின்
இருண்மைகளை
காணும் போது அன்றிய,
என் மனதில்
அணி அணியாக உன் நினைவுகள் தாம்...

"நேரம்"
இதோ வரும் என்று
கண் விழித்து காத்திருக்கின்றேன்,
ஏனோ
மரணம் கூட
என்னிடம் வரமாட்டேன் என்கிறது.

படுத்திருந்த பறவை,
பார்வையை மூட விடுகிறேன்
இன்றும் வழமையாக,
அந்த மேகத்தின் நிலவிலும்
சோகத்தின் சாயல்
அதுவே
விடி வெள்ளியின்
தோற்றமும் காணவேயில்லை.

ஊர் வர இந்த இரவுகள்
என்னைப் பயமுறுத்த ஆரம்பித்துவிட்டன.
மற்றவர்கள் தூங்கும்போது
என்று வரும் இரவுகள்
எனக்கு மட்டும்
உறக்கம் இன்றி நாட்களைத்
தொடர்ந்து வருகின்றன

உன்னைப் பிரிந்த நாள் முதலாய்
என் இமைகள்
மூட மாட்டேன் என்று அடம்பிடிக்கின்றது.
என்னறிவில்
இதுவரையிலே
உறக்கம் விடை பெற்றுச் சென்றுவிட்டது.
இப்போ என் விழிகள் மட்டுமே
நிரந்தரமாக
விழித்துக் கொண்டிருக்கிறது.

இன்றும்
நினைத்துப் பார்க்கிறேன்
நீ இப்போது
என்ன செய்து கொண்டிருப்பாய்?

www.tamilarangam.net

பல்வகை பாசாங்கு செய்துவிட்டு
நீயும் விதியை என்றெண்ணி
விழித்தும் கொண்டுதானிருப்பாயா?

உனக்காக
கட்டம் கீறாமல்
இதயத்தில் வார்த்தைகளை தொகுத்து வைத்திருந்தேன்.
அவை
எந்தன் கண்ணீர் கடலினிலே
கரைந்து போய் விட்டது.

அன்பே
எனக்கு ஒரு சந்தேகம்
"பிரியம்" என்ற உன் வார்த்தைக்கு
"பிரிவும்"
என்று ஏதேனும் பொருள் இருக்குமோ?
அகராதியை பார்த்து
உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இன்றைய இரவுகளின்
இருளைகளை
காணும் போதும் அன்பே
என் மனதில்
அனல் அலையாக உன் நினைவுகள் தாம்..

- அனுதாசன் -

---

43ம் பக்கத் தொடர்ச்சி.....

எப்படி என்று நான்
எப்படிச் சொல்ல?
என்றாலும்
வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை,
என்பது நீங்கள் அறிந்ததே.

இறுதிவரையில்
நாம் வழி தொடர்வோம்....

எனக்கு தலையுக்கே ஏதோ செய்தது. என்னென்று சொல்ல முடியவில்லை. ஒன்றுமே பேசாது ரொயிலற்றுக்குள் போய் மறைந்து கொண்டேன்.

முற்றும்.

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

## இல : 21




குறுக்கெழுத்துப்போட்டியில் பலர் ஆர்வம் காட்டியுள்ளமை, எமக்கு கிடைத்த விடைத்தாழ்கள்மூலம் தெரிவித்துள்ளது. போட்டியில் கலந்துகொண்டோருக்கும், பரிசுகள் கிடைத்தோருக்கும் எமது வாழ்த்துகள்.

பரிசுகளாக கவிதைத்தொகுப்பு, சிறுவர்நூல்கள், ஏனையசஞ்சிகைகள் என்ற வகையில் அனுப்பிவைக்கப்படும். சஞ்சீவி உங்கள் கைகளுக்கு காலக்கிரமத்தில் கிடைத்ததும், 15 நாட்களுக்குள் கு.எ. போட்டியின் பூர்த்தி செய்த தாளினை சஞ்சீவிக்கு அனுப்பிவையுங்கள்.

இட-வலம்:

1-8: இலங்கையின் தென்பகுதியில் 1983 யூலை 23ல் இதுநடந்து இன்று 10 வருடங்களாகின்றன.

9-12: "போர்ப்படை"ஐ இப்படியும் சொல்வர்.

18-20: இது பலவகை இருந்தும், இதில் ஒருவகைக்கு நீரருந்தத்தீரும்.

24-23: விவசாயத்தின் தேவைகருதி இலங்கையின் முன்னையமன்னர்கள் இவற்றைக்கட்டிவித்தும், புதுப்பித்தும் நீரைத்தேக்கிவித்தனர்.

25-27: நடுநிசிப்பொழுதை இப்படியும் கூறுவர்.

29-31: வெளியே உள்ளதுபோலல்லாது, இயக்கங்களின் 'உள்' இது விரிவடைந்ததால் பலரின் உயிரைக்குடித்தது.

37-40: 1960களின்போது இந்திய-தமிழ்நாட்டு பொதுவுடமை கருத்தரங்குகளில் பாடல்களின்மூலமும் இதமாகக்கருத்துச்சொன்னவர்----வரதராஜனார் ஆவார்.

www.tamilarangam.net

44-47: கல்வியறிவு அற்ற ஒருவரை இப்படியும் கூறுவர்.
49-54: சிங்க ஆசனத்தை இப்படிச்சொல்வர்.
59-61: தமிழ்மக்களின் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியதும், பல இயக்கங்கள் சந்தித்ததும் முதலாவது மகாநாடு நடந்த பூட்டான் நாட்டின் தலைநகரம் இது.
63-64: இல்லாத இதனை மதியால் வெல்லலாம் என கூறி மக்களு-க்கு பொய்யுரைப்பர்.

மேல்-கீழ்:

1-9 : இதனால் வசமாகா இதயமேது.
2-50: மொழியால், மதத்தால், சாதியால் மனிதகுலத்தையே கூறு-போடும் மனிதசெயற்பாட்டில் இந்த உன்னத சொல்லுக்கு மதிப்பற்றுள்ளது. இது குழம்பியுள்ளது.
3-35: இலங்கையின் தமிழ்மக்கள் மத்தியில் 1983ம் ஆண்டின் பின் இந்தச்சொல் பரவலாக அடிபட்டது/பேசப்பட்டது. இது குழம்பியுள்ளது.
6-14: நாம் எமது கலாச்சாரத்தினை திறமென தூக்கிப்பிடித்தி-ருக்க, இதன்மூலம் ஒருவரை அல்லது பலரைப்பேசி மனம் உடையவைப்போம்.
23-47: பெரும்பாலான திரைப்படங்களிலும், நாடகங்களிலும் இவ-ரின் பாத்திரமும் முக்கியமாகக்காண்பிக்கப்படும்.
24-8 : இருவராகவோ, இருபிரிவினராகவோ மேற்பட்டும், நடா-த்தும் தர்க்கத்தினை இப்படியும் சொல்வர்.
25-33: எம் மக்களுள்ளே இந்த அமைப்புமுறை முற்றாக அழிக்க-ப்படவேண்டும்.
30-54: 'முக'ரோமத்தினை இது செய்துகொள்வர்.
44-60: "அன்பு"க்கு இப்படியும் பொருளுண்டு.
64-56: மாலுமிகள் தாம் கடற்பாதையூடாக விரும்பும் இடத்து-க்கு சென்றடைய முக்கியமாக இந்த அறிகருவியை பய-ன்படுத்துவர்.

1. C.M.RAMMKUMAR
Nygårdterasserne 284.D
3520 Farum.

2. T.Tharmarany
Skrænten 31
6600 Vejen.

3. S.RATNASINGAM
Grønnedal 38
7600 Struer.

குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 ள | 3 வெ | 4 ழி | ■ | 6 ல் | 7 த | 8 மோ |
| 9 ர | ■ | 11 டு | 12 வ | 13 சு | ■ | 15 கு | 16 டா |
| 17 வி | 18 ர் | 19 கீ | 20 க | 21 மீ | ■ | 23 தி | ■ |
| 25 லி | 26 ர | 27 ஞ | ■ | 29 மா | 30 லி | ■ | 32 மெ |
| ■ | 34 ம | ■ | 36 க | 37 டு | 38 கி | 39 க | 40 ண் |
| ■ | 42 அ | 43 ச | 44 தி | ■ | 46 பெ | 47 ரு | 48 மை |
| 49 சு | ■ | 51 த | 52 ர் | 53 க் | 54 க | 55 ம் | ■ |
| 57 மௌ | 58 ன | 59 ழ் | ■ | 61 உ | 62 ரு | 63 பு | ■ |

20

மேல் - கீழ்:

1.25 : இரவல்
3.27 : வெடுக்கு
7.23 : தகுதி
8.16 : மோடா
13.37 : சும்மாடு
30.62 : யெருக்கல்
32.48 : மென்மை
36.52 : கதிர்
39.63 : கரும்பு
42.18 : அமரர்
43.59 : சதம்
57.49 : மௌசு

இடம் - வலம்:

1.4 : இனவெறி
8.6 : மோதல்
13.11 : சுவடு
15.16 : குடா
17.21 : வர்க்கம்
27.25 : குரல்
29.30 : மால்
36.40 : கடுக்கன்
42.44 : அசதி
46.48 : பெருமை
51.55 : தர்க்கம்
57.59 : மௌனம்
61.63 : உருபு

பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

---

அன்பான வாசகர்கட்கு,

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் எதிர்ப்புக்குரல் கொடுத்தும் போராடவும், உரிமைகளை பாதுகாப்பதற்கும் - என ஒர் நீண்டகால அமைப்பு எமது சங்கம் அன்று இன்றுவரை இயங்கிக்கொண்டிருந்த போதும், சஞ்சீவியானது தன்னாலியன்றளவு இடம் கொடுத்து இதுவரை வெளியிட்டு கருத்துக்களை அறிவித்தும் வருவது யாவரும் அறிந்ததே.

கடந்த சில காலங்களாகச் சஞ்சீவி தாமதித்து வெளிவருவதும், அதன் பக்கங்களை எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதும் நிதி நெருக்கடியின் விளைவே.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளின்பால் அக்கறை கொண்டவர்களும், அபிமானிகளுமான உங்களிடமிருந்து சஞ்சீவி தொடர்ந்தும் சிறப்புற வெளிவர, உங்களால் இயன்ற நிதியுதவியை எதிர்பார்க்கின்றது.

தங்கள் வங்கியூடாக நிதியுதவியினை அனுப்ப வேண்டிய கணக்கிலக்கம், முகவரியும்:

A/C NO: 7601-408876-9
VESTJYSK BANK
7500 HOLSTEBRO

அல்லது: POST-GIROKONTO: 3653528

சஞ்சீவி தொடர்புகளுக்கு
CHANCHIVE
DENMARKSGADE 10
7500 HOLSTEBRO - (DENMARK)

ஆசிரியர் குழு.

சண்: ஒரு வரலாற்றுத் தடயம். என்னும் கட்டுரை இவ்விதழில் இடம் பெறவில்லை. வரும் இதழில் தொடரும்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒட்டுரகம்

## துரைசண்முகம்

''சங்கர் இருக்கானா''.

கூடத்தில், ஊஞ்சலில் அமர்ந்தபடியே நெற்றியைக் குவித்து உற்று நோக்கினார் இராமமூர்த்தி அய்யர்.

''யாரது உள்ள வாங்கோ'

நிலப்படியிலிருந்து தலையை மட்டும் நீட்டிக் கொண்டிருந்த மணிகண்டன், இரண்டு அடி உள்ளே எடுத்துவைத்தான்.

''ஓ! மணிகண்டனா, வா.வா. யாரோ புது மனுஷா மாதிரி தெரிஞ்சுது. பலகாய்ல ஒக்காரு!''

ஊஞ்சலின் பக்கவாட்டில் இருந்த 'பெஞ்சின்' மேல் அழுந்தாது உட்கார்ந் தான் அவன்.

அக்கிரஹாரத்தில் குடிவந்த நாள் முத லாய் இராமமூர்த்தி அய்யரிடம் பழகியும் ஒவ்வொருமுறை அவரை அணுகும் போதும் கண்டிப்பான ஆசிரியரை நெருங் குவது போலவே மணிகண்டன் பழகினான்.

'அப்பா லெட்டர் போட்டாரா. கப்பல் நார்வே போறதா எழுதியிருக்கார்னு உங்க அம்மா சொன்னா. சௌக்கியந்தானா?!''

''சௌரியமா இருக்குறேன்னு லெட் டர் வந்துச்சு. அப்புறம். மாமா. நாளைக்கு காலேஜ்ல எம்.காம். அப்ளிகேஷன் கொடுக்கணும். சங்கர் உங்களோட போனா தெரிஞ்சவங்ககிட்டே சொல்லி வாங்க லாம்னு சொன்னான். அதான் நாளைக்கு நீங்க சங்கர அழைச்சிட்டு போறப்ப நானும் வரலாமான்னு கேட்டுட்டு போக வந்தேன்''.

''இது கூட செய்யலேன்னா அப்புறம் மனுஷாங்கறதுக்கு அர்த்தமே இல்ல. நாளைக்கு. காத்தால போகலாம். கும்ப கோணம் காலேஜ் பிரின்ஸிபால் கோதண்ட ராமன் இருக்கானே. அவன் நம்ப சோலை யப்பன்தெரு வெங்குட்டுக்கு கிளாஸ்மேட் போய் சொன்னா தட்டமாட்டான். காத்தால போகலாம்''.

இராமமூர்த்தி அய்யரின் அன்பான வார்த்தைகள் மணிகண்டன் மனதில் மகிழ்ச் சியையும் அவரின் மேல் மதிப்பையும் கொடுத்தன.

'வர்றேன் மாமா' என்று புறப்பட்ட வன். அடுப்பங்கரையிலிருந்து மங்களத்து மாமி வருவதைப் பார்த்துச் சற்று தாமதித் தான்.

''மணிகண்டா நீயும் உன் ஃபிரெண் டும் சமர்த்தா பி.காம். பாஸ் பண்ணிட் டேள். எம்.காமும். நல்ல ரேங்க் வாங்கி பாஸாகணும். கண்ட கண்ட பசங்களோ டெல்லாம் சேராதீங்கோ. நேத்துக்கூட அந்த கோடிவீட்டு பையனோட மணிக்க ணக்கா பேசிண்டிருந்தே. உன் இஷ்டம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் சொல்லப்படாது. இருந்தாலும் அவாள்ல்லாம் ஒரு மாதிரி. சொல்லிவைக் கிறேன்.

''நீங்க சொன்னா தப்பு இல்ல மாமி. பழைய சட்டை ஒண்ணு தைக்க கொடுத் தேன். அதான் நேத்தி அங்க பேசிட்டுருந் தேன். ரொம்ப பழக்கமெல்லாம் அவ னோட வச்சிக்கறது இல்ல''.

மனசு நோகாது மணிகண்டன் பதில ளித்தது மாமிக்கு திருப்தியாய் இருந்தது. மணிகண்டன் வீட்டைச் சேர்த்து மொத்தம் நாலுவீடுகள் அக்கிரஹாரத்தில் பார்ப்பனர் அல்லாதோர் வீடுகள். முத்துசாமி அய்ய ருக்கு இக்கட்டான நேரம். பண நெருக்கடி அந்த சமயம் பார்த்து எவ்வளவு விலை கொடுத்தாவது இந்த வீட்டை வாங்குவது என்ற முனைப்போடு வீட்டை வாங்கி அக் கிரஹாரத்தோடு மணிகண்டன் வீடும் இணைந்துவிட்டது. மற்ற மூன்று வீடுகளும் சத்திரம் டிபார்ட்மெண்டில் பழைய பணி யாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த வீடு கள். அவர்கள் அக்கிரகாரத்தோடு பொருந்த முடியாத அளவுக்கு பாரசயற்ற வர்கள். மேலும் மற்ற வீட்டுக்காரர்கள் சதா மீன் சட்டியைக் கழுவி ஊற்றுவது மங்க ளத்து மாமிக்கு வெறுப்பாயிருந்தது.

அய்யரோடு படிப்பு தொடர்பாக பேசிக் கொண்டிருந்த மணிகண்டனிடம் மீண்டும் மாமி குறுக்கிட்டாள் 'ஏம்பா உங் கப்பாக்கு லெட்டர் எழுதறச்சே இந்த கோடாலி தைலமும், யாட்லி பவுடரும் வாங்கிண்டுவரச் சொல்லு. நல்ல பவுடர் காசு கொடுத்தாலும் இங்க கெடைக்காது.

''உனக்கு வேற வேலை இல்லடி. அவாளுக்கு எத்தன ஜோலியோ போய் உன் வேலைய பாரு''. அதட்டுவது போல வார்த்தைகள் இருந்தாலும் இராமமூர்த்தி அய்யரின் தொனி செல்லமாக இருந்தது.

''ஏன் மாமா கேட்டா என்ன? வந்தா தர்றேன் மாமி''

குகன் இராமனோடு பழகுவதை பாக் கியமாக கருதியதுபோல மணிகண்டனுக்கு இராமமூர்த்தி அய்யரோடு பழகப்பழக இனிமையாயிருந்தது.

OOO

மேசை மீதிருந்த கொடுக்காபுளி பழ மும் காராசேவு பொட்டலமும் சீர்காழியிலி ருந்து பாட்டி வந்திருப்பதாய் கட்டியம் சொன்னது.

''எங்கம்மா பாட்டி?''

விஜயா புளி கரைத்துக் கொண்டிருந் தாள். உதட்டைக் குவித்து மெதுவாக முணு முணுத்தாள் ''மீனு வாங்க போயிருக்கு''. கேட்டவுடன் தேள் கொட்டியதுபோல அவ னுக்குச் சுரீரென்றது ''எத்தனை தடவம்மா சொல்றது. உங்களுக்கு அறிவே இல் லையா. இங்க இதெல்லாம் பண்ணாதிங் கன்னா கேக்கவே மாட்டடேங்குற. அக்கம் பக்கமெல்லாம் கவுச்சு' அடிச்சிட்டு அசிங் கமா இருக்குல. சகஜமா பழகுறவங்க வரு வாங்களா.. சே! திருந்தவே மாட்டீங்க''.

''நீ பிரியமா ரெண்டு சோறு திம் பேன்னு. அதான் போச்சு. ஊர்லேந்து வந் திச்சு. ஆசப்பட்டுச்சேன்னு சரின்னேன்''.

''இப்ப நான் உங்கள கேட்டனா? எனக்கு தகுந்தமாதிரி இல்லாம. இப்படி மானத்த வாங்குறிங்களே'' பக்கத்துவீட்டு பழக்கம் தீட்டுப்பட்டுவிடக்கூடாதே என்று பதறினான். கோபத்தில் முகம் கருவாடாய் சுருங்கிப் போனது.

''அப்பவே சொன்னேன் அவன் வந்தா கத்துவான்னு. கெழவி கேட்கமாட் டேங்குது. நீ ஆசையா அலைவயேன்னு நெனச்சா... நல்லா கத்துறடா'' மீன் மட் டுமா? ''கருவுற்ற ஒரு உயிரை தின்ன லாமோ?'' என்று இராமமூர்த்தி அய்யர் ஒரு வார்த்தை சொன்னதிலிருந்து மணி கண்டன் முட்டை தின்பதில் கூட அவ்வள வாக ஆர்வம் காட்டுவதில்லை. முதல்நாள் கருவாட்டுக் குழம்பை அடுத்தநாள் எடுத்து வைக்காவிட்டால் சண்டைக்குவரும் மகன் இப்படி பக்கத்துவீட்டு மோர்க்குழம்பில் கரைந்துபோனது விஜயாவுக்கு விளங்காத புதிராய் இருந்தது.

'ராப்பொழுது. சாப்டாம போயிடாத உனக்கு வேண்ணா ரசம் வைக்கிறேன். இன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னிமே வைக்கல.. மொதல்ல அந்த காராசே வைய எடுத்துக்கடா'', மணிகண்டன் தாயின் ஏக்கத்தை ஏறெடுப்பதாயில்லை. சங்கரைப் பார்க்கப் போய்விட்டான்.

ooo

''இந்தக் காலேஜை சௌத் இண்டியன் கேம்ப்ரிட்ஃஜ் —ன்னு சொல்லுவா'' இராம மூர்த்தி அய்யர். கல்லூரி பெருமையைச் சொல்லசொல்ல மணிகண்டனுக்கு கல்லூ ரியே பாடல்பெற்ற தலமாய் தெரிந்தது

''நீங்க ரெண்டுபேரும் இங்க படிக்கற துக்கு கொடுத்து வச்சிருக்கணும். உ.வே.சா மிநாதய்யர், சில்வர் டங் சீனிவாச சாஸ்திரி கள் எல்லாம் இங்க படிச்சவாதான் சீனுவாச சாஸ்திரிகள் இங்லீஷ் பேசினா வெள்ளக் கார தொரையே வாய பொளந்துண்டு நிப் பானாம்.'' இராமமூர்த்தி அய்யர் குலப்பெ ருமையை கம்பீரமாய் சொல்ல மணிகண் டன் பயபக்தியோடு கேட்டு நடந்தான்.

''நீங்க ரெண்டுபேரும் ஆபீஸ் ரூம்ல அப்ளிகேஷன கொடுங்கோ. நான் பிரின் ஸிபால பாத்துட்டுவந்து கூப்பிடறேன்''.

கல்லூரி முதல்வர் அறைக்குள் நுழைந்த இராமமூர்த்தி பத்துநிமிடம் கழித்து அவசரமாய் வெளியில் வந்தார். ''சங்கர்.. வா இப்படி...''

''இவன்தான் என் புள்ளையாண்டான் சங்கர். இவன் பக்கத்தாத்து பையன் மணி கண்டன். ஃபாதர் மார்ச்செண்ட் நேவில இருக்கார்.''

''அப்ளிகேஷன் நெம்பரை குடுங்கோ '' — அவசரப்படுத்தினார்

''வெங்குட்டு விசாரிச்சான். ஆத்துப் பக்கம் வர சொன்னான்''. வர்றேன் தாராசு ரம் வந்தா நம்மாத்துக்கும் வாங்கோ''

''இந்த அப்ளிகேஷன் நெனவுல வச் சுக்கோங்கோ... பாத்து செய்ங்கோ''.

''நோ ப்ராப்ளம். நம்பிக்கையா போங் கோ''.

''வர்றேன் சார்'' — மணிகண்டனும் சேர்ந்திசைத்தான்.

இராமமூர்த்தி அய்யர் ஒவ்வொரு காரியத்தையும் கையாள்வதைப் பார்க்கும் போது மணிகண்டனுக்கு பிரமிப்பாக இருந் தது ''அய்யரா இருந்தாலும் பாகுபாடில் லாம இருக்காரே' என மனம் வியந்து போனது. ''நம்ம சொந்தக்காரனுகளும் இருக்காங்களே எதுக்கும் வாய்க்கு கெடை யாது. டீசென்ட்டும் கிடையாது''. பக்கத்தி லிருக்கும் அய்யரை சொந்தம் சொன்ன மனசு முன்னேற முன்னேற, எந்தக் காரியத் தையும், எப்படியும் நிறைவேற்றத் தெரி யாத சொந்தக்காரர்கள் மேல் வெறுப்பு வளர்ந்தது அவனுக்கு.

மூவரும் வேலையை முடித்துக் கொண்டு டவுன் பஸ்ஸில் ஏறி அமர்ந்தனர்.

''வெயில் கொளுத்தறது'' - இராம மூர்த்தி அய்யர் தோளில் கிடந்த துண்டை எடுத்து விசிறிக் கொண்டார்.

''ஆமாம் மாமா ரொம்ப வியர்க்குது' மணிகண்டன் வழிமொழிந்தான்.

முறுக்கு விற்பவர் பஸ்ஸில் ஏறி விற்ற பின்பு அடுத்து இஞ்சி மரப்பாகாரன் எண் சீர்விருத்தத்தில் பாடியதுமாதிரி கடகடவெ னப் பொழிந்தான்.

''மனுஷாளோட திறமைய பாத்தேளா ஒவ்வொருத்தருக்கும் பகவான் ஒவ்வொரு மாதிரி தெறமைய கொடுத்திருக்கான். என் னமா பேசறான் பாரு'' இராமமூர்த்தி அய் யர் ரசனையோடு வியந்து சொன்னார்.

''அன்பார்ந்த உழைக்கும் மக்களே'' குரல்கேட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண் டிருந்த பயணிகள் பேருந்துக்குள் கவனித்த னர்.

கையில் புத்தகங்களுடன் இருவர் புத் தகங்களின் அட்டையைக் காட்டி பேசினர்.

''இன்றைக்கு பார்ப்பன இந்து மதவெ றிக் கும்பல் இராமனுக்கு கோயில் கட்ட நம்மையெல்லாம் அழைக்கிறது ஆனால் இங்கிருக்கும் கோயிலுக்குள் கருவரைக் குள் நாம் சென்றால் ''சூத்திரனே நுழையா

www.tamilarangam.net

தே'' எனத் தடுக்கிறது. இப்படி தன் பார்ப்பன சாதிவெறியைத் காட்டிக் கொண்டே நம்மையெல்லாம் இந்துக்களே ஒன்று சேருங்கள் என்பது மோசடி இல்லையா? எண்ணிப்பாருங்கள்....''

இன்னும் அந்த நபர் பேசப்பேச இதுவரை பல்வேறு விஷயங்களைச் சொன்ன இராமமூர்த்தி அய்யரே சொல்லாத செய்தியெல்லாம் அந்த இளைஞன் பேசுவது மணிகண்டனுக்கு முதலில் ஆச்சரியமாய் இருந்தது. உலக யுத்தங்களைப் பற்றியெல்லாம் மணிக்கணக்கில் கதைகதையாய் இராமமூர்த்தி அய்யர் சொல்லியிருக்கும் போது, இதெல்லாம் ஏன் சொன்னதில்லை? மனதில் கேள்விகள் முளைவிட்டன. புத்தகம் விற்ற இருவரில் இன்னொருவரும் பேசத் தொடங்கினார்.

''இட ஒதுக்கீடு என்றால். பொருளாதாரம் பார்த்து வேலை கொடுக்கவேண்டும் எனும் பார்ப்பனர்கள். கோயில் கருவறைக்குள் மட்டும் 'சாதி' பார்த்து பார்ப்பனருக்குதான் அர்ச்சகர் உரிமை என்பது மோசடி இல்லையா. இந்த லட்சணத்தில் எல்லோரும் இந்து என்பது யாரை ஏய்க்க?''

இன்னும் அவர் பேசுவதற்குள் இராமமூர்த்தி அய்யர் பொறுமையிழந்து எழுந்து விட்டார்.

''ஸார் சும்மா பார்ப்பான் பார்ப்பான்னு பப்ளிக் பிளேஸ்ல வந்து பேசாதேள். போய் மீட்டிங் போட்டு பேசுங்கோ''

''எங்க பேசுனா என்ன? நாங்க சொல்றது சரியா? தப்பா நீங்க பதில் சொல்லுங்க அதவிட்டுவிட்டு பேசாதேன்னு சொல்ல உங்களுக்கு உரிமை இல்ல''.

''எல்லாரையும் கர்ப்பகிருகத்துக்குள்ள விட்டா பின்ன சாஸ்திரம், சம்பிரதாயம் எதுக்கு? பாப்பான்தான் இளிச்சவாயனா. மத்தவா விட்டுருவாளா. இராமமூர்த்தி அய்யர் வரிஞ்சு கட்டி பேசுவதும். புத்தகம் விற்பவர் சொல்லும் கருத்தக்களும்.. இதுவரை தலைகீழாய் நின்ற மணிகண்டனை ஒரே அடியாக யாரோ புரட்டிப் போட்டது போல இருந்தது. ஒரு கணம் குழம்பிப்போனான்.

புத்தகம் விற்றவர்கள் பேச்சை நிறுத்துவதாகத் தெரியவில்லை. அவர்கள் பேச்சைக்கேட்க அய்யர் முகம் சிவந்து பொறுமினார். இராமமூர்த்தி அய்யர் இவ்வளவு பரபரப்பாகி மணிகண்டன் இதுவரை பார்த்ததில்லை. 'சூத்திரன் - வேசிமகன்' என்பது தேவைதானா..? என்று பேசினால் என்ன தவறு. 'எல்லோரும் மனுஷாதான்' என்று பேசும் இராமமூர்த்தி அய்யரா அவர்களின் நியாயமான கேள்விகளுக்கு பதிலளிக்காமல் எல்லாரும் கோயிலுக்குள்ள போக முடியாது'ங்கிறார்'' மணிகண்டன் அய்யரை முதன் முறையாக சந்தேக கண்ணோடு ஏறிட்டு பார்த்தான்.

''காசுக்காக கண்டதையும் பேசற நாய்கள். மணிகண்டா நீ ஏன் அப்செட் ஆயிட்டே. 'சீட்' கிடைக்குமோன்னு அதே நெனப்பில் இருக்கியா. டோன்ட் வொர்ரி. நல்லபடியா முடிஞ்சிடும்''. இராமமூர்த்தி அய்யரைப் பற்றி குழப்பத்திலிருந்த மணிகண்டன் இன்னும் அந்த சம்பவத்தின் அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாய் ஜன்னல் வழியே வெறித்துக் கொண்டிருந்தான்.

இராமமூர்த்தி அய்யரே திரும்பவும் தொடர்ந்தார். ''பார்த்தியா ஒட்டுமாங்கனி சீசன் களைகட்டுது.. ஒட்டுக்கனியே தனி ருஜி''

பிரச்சினையில் சூட்டிலிருந்து விடுபட்டு மாங்கனி விஷயத்தை ஆரம்பித்து சகஜ நிலைக்குத் திரும்பினார். மணிகண்டனுக்கு மனதில் ஏதோ உறுத்தல் விளைந்தாலும், இனியும் மௌனம் சாதிப்பது இராமமூர்த்தி அய்யருக்கு சந்தேகத்தை உண்டு பண்ணிவிடும் என பயந்து அவமானத்தின் அவலத்தை உணர்ந்தம். அய்யரின் நட்பில் இளைப்பாறும் சுகத்தோடு அவனும் மாம்பழச் சுவையில் மூழ்கினான். ''ஆமாம் மாமா நல்லா இருக்கு. வாங்கட்டா?''

''வேண்டாம்டா.. பஸ் பொறப்பட போறது'' துருத்திக்கொண்டு கிளம்பிய கேள்விகளை அய்யரிடம் கேட்டு பிரச்சினை உண்டுபண்ணாமல் காரிதுப்ப வேண்டிய எச்சிலை 'நாகரீகமாக' விழுங்கிக் கொண்டான் மணிகண்டன்.

நன்றி : புதிய கலாச்சாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்றாவது பாதைக்கான அரசியல் தீர்மானம்.

---

தமிழ் விடுதலைப் போராட்டம் தேக்கத்துக்குள்ளான இன்றைய நிலையில் தமிழ் மக்களின் சகல உரிமைகளைப் பெற 'மூன்றாவது பாதை' தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்நிலையில் மூன்றாவது பாதை தொடர்பான அரசியல் தீர்மானம் ஒன்று எமக்குக் கிடைத்துள்ளது. இத்தீர்மானத்தினை கடந்த கால போராட்டத்தைப் போல கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாமல், ஒரு திறந்த விவாதத்தினூடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பது இன்றைய நியதியாகும்.

எமக்குக் கிடைத்த பிரசுரத்தினை இங்கு வெளியிடுகின்றோம்.

— சஞ்சீவி ஆசிரியர் குழு —

---

மூன்றாவது பாதை பின்வரும் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டதாகும்.

(1)

1. தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களைப் தமது பாரம்பரிய பிரதேசமாகக் கொண்டவர்கள். அவர்கள் ஒரு தேசிய இனத்தவர். பிரிந்து போதல் உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையுள்ளவர்கள்.

2. பௌத்த சிங்களப் பேரினவாத அரசின் அடக்குமுறையும், அதன் இருப்பு ( நலன் ) நோக்கம் என்பன தேசிய இன வளர்ச்சியை சிதைக்கிறது. இந்த திட்டமிட்ட இன அழிப்பிலிருந்து விடுபட தமிழ் மக்கள் ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

3. தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டம்.

அ. தேசிய உரிமையை வென்றெடுக்க உறுதியாக விட்டுக் கொடுக்காது போராடுதல்.

ஆ. சாதி அமைப்பிற்கு எதிராகப் போராடுதல்.

இ. ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராடுதல்.

ஈ. இலங்கையரசு, பிராந்திய வல்லரசு மற்றும் ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் செய்வதினூடாக சாதிக்க முடியாது.

உ. மக்களின் ஐக்கியத்தாலும், உறுதியாலும், அரசியல் பலத்தாலும் உருவாக்கப்படும் மக்கள் யுத்தத்தால் மட்டும் சாத்தியம்.

ஊ. தமிழ் தேசிய இனத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கமும் இணைந்து அவற்றிற்கு இடையேயான முரண்பாட்டைத் தேசிய முரண்பாட்டிற்குள் கீழ்படுத்தி சிநேக பூர்வ வழிகளில் கையாளுதல்.

எ. போராட்டத்தில் ஐக்கியப் படுகின்ற அனைத்துப் புரட்சிகர பிரிவினரும் தமது சொந்த நலன்கள் அடிப்படையில் தமக்கான தனித்துவமான ஸ்தாபனங்களைக் கொண்டிருக்கும் சனநாயகம் உத்தரவாதப்படுத்தப் படுவதாகவும், ஆயினும் இந்நலன்கள் ஐக்கிய முன்னணியின் குறிக்கோளைப் பாதிக்கா வண்ணம் அதன் நலன்களுக்குக் கீழ்ப்பட்டு அனுசரிப்படுவதாகவும், தமது வளர்ச்சிப் பாதை வகுத்துக் கொள்வதாக இருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(2.)

1. முஸ்லீம் மக்கள் தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதியினரோ, அல்லது அதற்குக் கீழ்ப்பட்டவர்களோ அல்லர். மாறாக அவர்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர்கள். இவர்கள் எமது போராட்டத்தில் ஊக்கமிகு பங்காளிகளுமாவர். இவர்களிற்கான அரசியலதிகார அமைப்பு முறைகள் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்டவையாக அமைதல் வேண்டும். அவர்கள் ஐக்கியப்படுவதற்கு மேலாக அவர்களது இணைவு குறித்து முடிவு அவர்களது சுயநிர்ணய உரிமையாகும்.

2. மலையக மக்கள் தமிழ் தேசியத்தின் ஒரு பகுதியினரோ அதற்குக் கீழ்ப்பட்டவரோ அல்லர். மாறாக அவர்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர்கள். இவர்கள் எமது போராட்டத்தில் ஊக்கமிகு பங்காளிகளாக இருப்பர். மலையக மக்கள் வாழும் பிரதேசங்கள் அவர்களது சொந்தப் பிரதேசங்களாகக் கணிக்கப்படுவதோடு அப்பிரதேசங்களில் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்டதும், அவர்களது இன உருவாக்கத்தை வளர்த்தெடுப்பதுமான அரசியலதிகார அமைப்பொன்றினை உருவாக்குதல்.

3. சிங்கள மக்கள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிரிகளோ, தமிழ் மக்களின் எதிரிகளோ அல்லர். அவர்களும் எமது பொது எதிரியால் ஒடுக்கப்படுபவர்களே. ஆயினும் தேசிய ரீதியில் சிங்கள மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைப் போக்கினைக் களைந்தெறியாதவரை அவர்கள் நமது போராட்டத்தின் நியாயத் தன்மையை புரிந்து கொள்ள முடியாது. எனவே அவர்களை இந்தச் சிந்தனையிலிருந்து விடுவிக்க , நாம் எமது போராட்டத்தை சரியான வழியில் நடைமுறைப் படுத்துவதன் மூலமே அவர்களுக்கு உதவ முடியும். எமது போராட்டத்தின் நியாயத் தன்மையைப் புரிந்து கொள்ளும் சிங்கள மக்கள் தற்போது ஒருவகை மறைமுக சேமிப்பு சக்திகளாவர்.

2. அ இந்திய வல்லாதிக்க அரசு தமிழ் தேசிய விடுதலையினதும், இலங்கையின் சுயாதிபத்தியத்தினதும் எதிரியாக இருப்பினும் கூட அதனால் ஒடுக்கப்படும் இந்திய மக்களும் , அவர்களது புரட்சிகர அமைப்புக்களும் எமது நட்பு சக்திகளே. அவர்களது ஆதரவு எமது போராட்டத்தின் வெற்றிக்கு கணிசமான அளவு முக்கியமானது ஆகும்.

ஆ. இந்தியா மட்டுமன்றி ஏனைய நாடுகளின் புரட்சிகர சக்திகளும் எமது போராட்டத்தின் வெற்றிக்கு கணிசமான அளவு முக்கியமானது ஆகும்.

(3 ) எமது நோக்கங்களையும் எதிரிகளையும் நண்பர்களையும் இவ்வாறு வகைப்படுத்தலாம்.

1.அ புதிய ஜனநாயகப் புரட்சியை நடத்துதல்.

ஆ.தமிழ் ஈழ மக்கள் சனநாயக சோசலிசக் குடியரசை அமைத்தல்.

2.அ. இலங்கை பௌத்த சிங்கள பேரினவாத அரசு தமிழ் தேசியத்தின் முதல் எதிரி.

ஆ. இந்திய வல்லரசு, எதிரியின் கூட்டாளியும், எமது பிராந்திய எதிரியுமாகும்.

இ. அமெரிக்க தலைமையிலான இன்றைய சோவியத் சீனா உள்ளிட்ட ஏகாதிபத்தியக் கூட்டினர் எமது சர்வதேச எதிரிகளாவர்.

ஈ. இலங்கை நவகாலனிய அரைநிலப்பிரபுத்துவ அமைப்பாகும்.

உ. தமிழ் தரகு முதலாளிகளும், தமிழ் நிலப்பிரபுக்களும் எமது எதிரிகள். இவர்கள் போராடுவது போல செயலபட்டாலும் இவர்கள் திட்டமிட்டு பேராட்டத்தை அழிப்பவர்கள்.

3. அ. தமிழ் தொழிலாளர்கள் விவசாயிகள் தலைமையை ஏற்றுக் கொள்ளும் அனைத்து ஒடுக்கப்படும் தமிழ் தேசிய வர்க்கங்களும் எமது சக்திகளாவர்.

ஆ. ஒடுக்கப்படும் முஸ்லீம், மலையக மக்கள் ஆகியோர் எமது உறுதியான நண்பர்களும் பங்காளிகளுமாவார்.

இ. ஒடுக்கப்படும் சிங்கள மக்கள் நமது மறைமுக சேமிப்பு சக்திகளாவர்.

ஈ. ஒடுக்கப்படும் இந்திய மக்கள், தமிழ் நாட்டு மக்கள் எமது மறைமுக சேமிப்பு சக்திகளாவர்.

(4.) அரசியல் கட்சிகள்.

அ. தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தரகு முதலாரித்துவ நிலப்பிரபுத்துவத்தை பிரதிநிதிப் படுத்தும் பிரிவினர்.

ஆ.தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவப் பிரிவினை

www.tamilarangam.net

பிரதிநிதிப் படுத்துபவர்கள்.

இ. பிற தமிழ் கட்சிகள். இக்கட்சிகள் வர்க்க அடிப்படையில் குட்டி பூர்சுவா அடிப்படையே. போராட்டத்திற்கு துரோகம் இழைத்ததுடன் இவர்கள் தமிழ் தரகு முதலாளித்துவ பிரிவினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சிங்கள தரகு முதலாளித்துவ பிரிவுடன் சமரத்திற்கு சென்று இன்று துரோகிகளாக மாறியுள்ளனர்.

ஈ. சிறு குழுக்கள் தமிழ் தேசிய விடுதலையில் ஈர்க்கப்பட்ட குட்டிப் பூர்சுவா வர்க்கத்தின் புரட்சிகர பிரிவினைக் கொண்டுள்ள இக் குழுக்கள் போக்கிடமற்றவையாக உள்ளன. இவர்கள் புலிகளுடன் அல்லது புலி எதிர்ப்பு முகாமுடன் நட்புக் கொள்ளும் போக்கினை இவை கொண்டுள்ளன. சரியான அமைப்பு உருவாகில் அதனுடன் கூட்டு சக்திகளாக இத் திட்டத்தின் அடிப்படையில் இணைவர்.

(5.) நாம் மேற் குறிப்பிட்ட விடயத்தை வென்றெடுக்க கையாளும் வழிமுறைகள்.

1 அ. எதிரியினை அம்பலப் படுத்துதல்.
ஆ. பாதிவழிக் கூட்டாளிகளை இனங் காட்டுதல்
இ. ஊசலாடும் நம்பகமற்ற கூட்டாளிகளை அம்பலப் படுத்துதல்.
ஈ. ஊசலாடும் துரோக நிலையெடுத்தோரின் அரசியல் துரோகத்தை இனங்காட்டி அவர்கள் அணிகளை வென்றெடுத்தல்.
உ. ஊசலாடும் புரட்சிகர அணியை வென்றெடுக்கப் போராடுதல்.
ஊ. தத்துவார்த்த அரசியல் விவாதத்தை நடத்துதல்.

2 அ. பாராளுமன்ற பாதையை சமரசத்தை பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனை தீர்க்கப்படலாம் என்னும் போக்கை அம்பலப்படுத்துதல்.
ஆ. கடந்த கால போராட்ட அனுபவங்களை கேள்விக் குள்ளாக்குதல்.
இ. போராட்டத்தில் நடக்கும் பிழைகளை அம்பலப்படுத்துதல், விமர்சித்தல்.
ஈ. ஆயுதப் போராட்டம், சுயநிர்ணய உரிமை போன்ற எமது அடிப்படைக் கொள்கைகளை பிரச்சாரம் செய்தல்.

முன்னணிக்கான இத்திட்டம் மேலும் விவாதிக்கப்பட்டு செழுமைப்படுத்தபட வேண்டுமென பொதுச் சபையானது எல்லோரிடமும் கோருகிறது.

இத்திட்டத்திற்குஅப்பால்.

1. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியில் எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் போக்குடன் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து மக்கள் ஆதரவுள்ள தொழிலாளர், விவசாயிகள் எழுச்சி ஏற்படும் பட்சத்தில் ' தமிழீழம் ' என்ற கருத்தை மறுபரிசீலனைக்குட்படுத்தி ' ஐக்கிய இலங்கைக்கான ' புரட்சிக்காகப் போராட வேண்டும் என்ற கருத்தானது இம் முன்னணிக்கான திட்டத்தில் இணைக்கப்பட வேண்டுமா ?

2. கிழக்கு மாகாண மக்கள் சுயநிர்ணய உரிமையைக் கோரும் அளவிற்கு வடக்கு, கிழக்கு மக்களுக்கு இடையில் முரண்பாடு கூர்மை அடைந்துள்ளதா?

3. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் முதலாளித்துவ தேசிய வாத போக்கை பிரதிநிதிப்படுத்துபவர்களா ?
போன்ற இக் கேள்விகள் விவாதத்திற்கு உட்படுத்தப்படுவதென பொதுச் சபை முடிவெடுத்துள்ளது.

- மூன்றாவது பாதைக்கான பொதுச் சபை

---

16, 17, 18 - 07 . 1993.

www.tamilarangam.net

# PRESSEMEDDELELSE
## fra Dansk Flygtningehjælp

**பத்திரிகை அறிவிப்பு**

**டென்மார்க்வாழ் அகதிகளுக்கும், இடம்பெயர்ந்த வெளிநாட்டவர்களுக்குமான இலக்கிய அழைப்பு**

**21.07.93**

டேனிஸ் அகதிகள் நலன்புரிச்சங்கம் Brøndum / Aschehoug பதிப்பாசிரியர்களுடன் இணைந்து டென்மார்க்வாழ் அகதிகளிடமிருந்தும், இடம்பெயர்ந்த வெளிநாட்டவர்களிடமிருந்தும் தமது சொந்த படைப்புகளை, இப் படைப்புகள் மதிப்பீடு பெறுமிடத்து வெளியீடு செய்யும் வாய்ப்புக் கொண்டதாக அனுப்பிவைக்கும்படி அழைப்புவிடுகின்றது. இது அகதிகளினதும், இடம்பெயர்ந்த வெளிநாட்டவர்களினதும் இலக்கிய வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கம் கொண்டதாகவும், டேனிஸ் புத்தகச்சந்தையில் இவற்றை வெளியீடு செய்யும் வாய்ப்பு கலாச்சார வாழ்வில் இன்றியமையாததொரு பங்களிப்பாகவும் அமைகின்றது.

நாம் பல தரப்பட்ட படைப்புகளை கோருகின்றோம். உதாரணமாக: சிறுவர் நூல்கள், சிறுகதைகள், கவிதைகளும் நாவல்களும், ஆனால் வேறு வகையான, பொருத்தமான ஆக்கங்களும் உதாரணமாக: கட்டுரைகள், நிலையில் நிற்கின்ற நினைவுகள் அல்லது வரலாறுகளும் விரும்பத்தக்கதாகும், இருப்பினும் நாடகங்களல்ல.

இப் படைப்புகளுக்கு எந்தவிதமான வரையறுக்கப்பட்ட கருப்பொருளும் இல்லை. நாம் அகதிகளிடமிருந்தும், இடம்பெயர்ந்த வெளிநாட்டவர்களிடமிருந்தும் படைப்புகளை கோருகின்றோம். ஆனால் இவை "புலம்பெயர்ந்து நாடுகள்", "அந்நியமாதல்" சம்பந்தப்பட்ட விடயம் கொண்டதாகவும் அமையவேண்டுமென்பது எந்தவிதமான நிபந்தனையுமற்றதாகும்.

ஆக்கங்களை தங்கள் தாய்மொழியில் அனுப்பிவைக்கலாம். இவை பொருத்தமான மொழிபெயர்ப்பு ஆலோசகர்களினால் மதிப்பிடப்படும். ஆக்கங்களில் எவ்வாறு வெளியீட்டுக்கு உகந்ததென்பது இறுதி முடிவை டேனிஸ் அகதிகள் நலன்புரிச்சங்கம் பதிப்பாசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளும். வெளியீடானது மொழிபெயர்க்கப்பட்ட இலக்கிய படைப்புகளுக்கான சாதாரண நிபந்தனைகளின் கீழ் இடம்பெறும்.

அனுப்பிவைப்பதற்கான இறுதித்திகதி 01-12-1993 ஆகும். வெளியீடானது 1994ம் ஆண்டு இலையுதிர்கால-த்தினிடையில் இடம்பெறுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.
ஆக்கங்களின் அதிகூடிய அளவானது - தட்டெழுத்து செய்யப்பட்டதன் அளவுகள் அறிவிக்கப்படுகின்றது.
நாவல்கள் - A4 அளவிலான தாளில் 200 பக்கங்களைக் கொண்டதாகவும்,
சிறுகதைகள் - A4 அளவிலான தாளில் 150 பக்கங்களைக் கொண்டதாகவும்,
சிறுவர் நூல்கள் - A4 அளவிலான தாளில் 100 பக்கங்களைக் கொண்டதாகவும்,
மற்றைய ஆக்கங்கள் - A4 அளவிலான தாளில் 200 பக்கங்களைக் கொண்டதாகவும்,
அத்துடன் அனைத்து ஆக்கங்களும் வரிகளுக்கிடையில் இடைவெளி விட்டு எழுதப்படல் வேண்டும்.

ஆக்கங்களை சொந்தமொழியில் அனுப்பிவைக்கலாம். அத்துடன் மாதிரியாக ஒரு அத்தியாயத்தை அல்லது ஒர் பகுதியை டேனிஸ் மொழியில் மொழிபெயர்த்தும் அனுப்பிவைத்தல் வேண்டும். கலாச்சார நிதியமானது ஆக்கங்களை மதிப்பிடுவதற்கான மொழிபெயர்ப்புகளை வழங்கியுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் நபருடன் தொடர்பு கொள்ளவும்
Kultur- og fritidskonsulent i Dansk Flygtningehjælp
Ragnhild Riis tlf: 33 91 27 00 lokal: 425.

ஆக்கங்கள் யாவும் தங்கள் பெயர், முகவரி என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டதாகவும், காகிதஉறையில் "Litterær invitation" எனக் குறித்தும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

DANSK FLYGTNINGEHJÆLP
BORGERGADE 10,
Postboks 53,
1002 - KØBENHAVN - K.

BORGERGADE 10 . 1300 KØBENHAVN K . TELEFON 33 91 27 00 . FAX 33 32 84 48



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | | 14 | | 16 |
| | 18 | 19 | 20 | | | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 ச | 31 | |
| 33 | 34 | 35 இ | | 37 | 38 | 39 | 40 |
| | 42 மா | | 44 | 45 | 46 | 47 | |
| 49 | 50 | 51 | 52 | 53 | 54 | | 56 |
| | | 59 | 60 | 61 | | 63 | 64 |

இ
ல
21

உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

c: 24 ,No: 21

afs. ______________________________

______________________________

______________________________

______________________________

www.tamilarangam.net

# சஞ்சீவி

## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland | |
| France | |
| Italy | 25 US |
| London | |
| Germany | |
| Canada | |
| Australia | 29 US |
| Sweden | 125kr. |
| Norway | |
| Danmark | |

காசோலை எடுக்கவேண்டிய வங்கிக்கணக்கும், முகவரியும்

A/C.NO.7601-408695-3
Tamilsk Dansk Venskabs Forening
Vestjysk Bank
7500-Holstebro,
Danmark.

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

**CHANCHIVE**
**Danmarksgade.10**
**7500 Holstebro**
**DANMARK**

"மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

www.tamilarangam.net

**CHANCHIVE**
**Danmarksgade.10**
**7500 Holstebro**
**DANMARK**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்